தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### அதிக லாபம் தரும் பட்டு வளர்ப்பு!



அதிக லாபம் தரும் தொழில்களில் பட்டுவளர்ப்பு முன்னணியில் உள்ளது. வேலைப் பளுவை குறைத்து, அதிக வருவாயை ஈட்டித் தரும் வகையிலும் இத் தொழில் காணப்படுகிறது.

இது தொடர்பாக தென்காசியில் உள்ள பட்டு வளர்ச்சித் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு: விவசாயிகள் சந்திக்கும் மூன்று முக்கிய பிரச்னைகளான ஆள்கள் பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை, வருவாய் குறைவு ஆகியவற்றைத் தீர்க்கும் வகையில் பட்டுவளர்ப்புத் தொழில் விளங்கி வருகிறது.

பட்டு வளர்ப்புத் தொழிலில் வேறு எந்த விவசாயத்தைக் காட்டிலும் ஆண்டிற்கு, ஒரு ஏக்கருக்கு நிகர லாபமாக குறைந்தபட்சம் ரூ.1 லட்சத்திற்கு மேல் வருமானம் பெறலாம். வீட்டிலுள்ள இரண்டு அல்லது மூன்று நபர்கள் போதுமானது. சொட்டுநீர்ப் பாசனம் மூலம் அதிகளவு பரப்பை, குறைந்த நேரத்தில் பாசனம் செய்து ஆண்டு முழுவதும் அதிக வருவாய்ப் பெறலாம். விவசாயிகள் உடனடியாக பட்டுவளர்ப்புத் தொழில் மேற்கொள்வதற்கும், தொடரந்து இத் தொழிலைச் செய்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்ட மானிய உதவிகளைச் செய்து வருகிறது. மல்பரி நாற்று நடவு செய்ய

ஒரு ஏக்கருக்கு மானியமாக ரூ. 10,500 வழங்கப்படுகிறது. ஒரு விவசாயி அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை மானியம் பெறலாம். குறு-சிறு விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப் பாசனத்திற்கு ஒரு ஏக்கருக்கு மானியமாக ரூ.30 ஆயிரமும், பெரு விவசாயிகளுக்கு ரூ.22 ஆயிரத்து 500-ம் வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை மானியம் பெறலாம். முதல்நிலை புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு ரூ.82 ஆயிரத்து 500-ம், 2-ம் நிலைக்கு ரூ.87 ஆயிரத்து 500-ம், 3-ம் நிலைக்கு ரூ.63 ஆயிரமும் மானியமாக வழங்கப்படும். புழு வளர்ப்பு உபகரணங்கள் கொள்முதலுக்கு ரூ.52 ஆயிரத்து 500 மானியமாக வழங்கப்படும். மல்பரி மரங்களைத் தோட்டத்தைச் சுற்றி வளர்ப்பதற்கு 100 மரங்களுக்கு ரூ.3 ஆயிரத்து 497 மானியமாக வழங்கப்படும். வெண்பட்டு வளர்ப்புக்கு இலவச பயிற்சி எடுக்க ஒரு விவசாயிக்கு ரூ.5 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு தென்காசியில் உள்ள பட்டு வளர்ச்சித் துறை அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தாகம் தணிக்கும் தர்ப்பூசணி சாகுபடி!



தகிக்கும் வெயிலுக்கும், தவிக்கும் தாகத்திற்கும் அருமருந்தாக இருந்து இளைப்பாறுதல் தருவது தர்ப்பூசணி. நீர்சத்து நிறைந்த மருத்துவக் குணங்கள் கொண்ட தர்ப்பூசணி சாகுபடி செய்து பயன்பெறுமாறு தோட்டக்கலைத் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சிட்ரல்லுஸ்லனாடஸ் என்ற தாவரவியல் பெயரைக் கொண்டுள்ள, குர்குர்பிடேசியே குடும்பத்தைச் சேர்ந்த தர்ப்பூசணி சிறந்த மருத்துவக் குணங்களைக் கொண்டது. நோய் எதிர்ப்பு சக்தியைத் தரும் மிகச் சிறந்த ஆண்டி

ஆக்ஸிடெண்ட்கள் சிலவற்றைக் கொண்டுள்ளது. இருதய நோய், சர்க்கரை நோய், குடல் புற்று நோய் ஆகியவற்றைத் தடுக்க தர்ப்பூசணி உதவுவதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

வைட்டமின்கள் ஏ.பி.சி ஆகியவற்றை அதிகம் கொண்டுள்ளன. 92 சதவிகிதம் நீர்ச்சத்தைக் கொண்டுள்ள இந்த தர்ப்பூசணி, குறைந்த அளவு கலோரி இருப்பதால் கொழுப்பே இல்லாததாலும் எடைக் குறைப்புக்கு மிகவும் ஏற்ற உணவாகும். இதில் அதிகளவில் பொட்டாசியம் தாது உப்பு இருப்பதால், ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், இதயத்துடிப்பைச் சீராகவும், சிறுநீரகக் கல் உருவாவதைத் தடுக்கவும் உதவுகிறது. இதில் உள்ள பீட்டா கரோட்டின், லைகோபின் ஆகிய கரோட்டினாய்டுகள் புரோஸ்டேட் சுரப்பி, மார்பகம், நுரையீரல், குடல் ஆகியவற்றில் புற்றுநோய் வரும் வாய்ப்பைக் குறைக்கிறது. வைட்டமின்- பி 6 மூளை சுறுசுறுப்பாக இயக்கப் பெரிதும் உதவுகிறது. சிட்ருலின், அர்ஜினைன் ஆகிய அமினோ அமிலங்கள் ஒட்டுமொத்த இருதயச் செயல்பாடுக்கும், யூரியாவை வெளியேற்றி ரத்த சுத்தகரிப்புக்கும் உதவுகிறது.

சாகுபடி முறைகள் : பி.கே.எம். 1, சுகர்பேபி, அர்காமனிக், டிராகன் கிங், அர்காஜோதி, அர்கா ஐஸ்வர்யா, அம்ருத் அபூர்வா, பூசா பெடானா, புக்கிசா, மைதிலா (மஞ்சள்), தேவயானி (ஆரஞ்சு) ஆகிய ரகங்களை சாகுபடி செய்யலாம். அங்ககச்சத்து நிறைந்த, வடிகால் வசதியுள்ள 6.5 முதல் 7.5 வரையுள்ள கார அமிலத்தன்மை கொண்ட மணற்சாரி நிலம் ஏற்றது. ஜனவரி முதல் மார்ச் ஏற்ற பருவமாகும்.

விதைப்பு: நன்கு உழுது எட்டு அடி அகலப்பார் அமைத்து பார்களுக்கு இடையில் கால்வாய் பிடிக்க வேண்டும். ஏக்கருக்கு ஒன்றரை கிலோ விதை தேவைப்படும். கால்வாயையொட்டி மூன்று அடி இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். குத்துக்கு 2 செடிகள் இருக்குமாறு விதைத்த 15 ம் நாள் கலைத்து விட வேண்டும்.

விதைகளை ஊன்று முன் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பின்னர் வாரம் ஒரு முறை நீர்ப்பாய்ச்ச வேண்டும். சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பது நீர்பயன்பாட்டைச் சிக்கனம் செய்து நிறைவான மகசூலை தர உதவும்.

உரமிடுதல்: அடியுரமாக ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் இட வேண்டும். மேலும் ஏக்கருக்கு 22 கிலோ மணிச்சத்து தரவல்ல 140 கிலோ சூப்பர் பாஸ்பேட், 22 கிலோ சாம்பல் சத்து தரவல்ல 40 கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை அடி உரமாக இட வேண்டும். விதைத்த 30 வது நாளில் 22 கிலோ தழைச்சத்து தரவல்லை 50 கிலோ யூரியாவை மேல் உரமாக இடவேண்டும்.

எத்தரல் வளர்ச்சி ஊக்கியை 10 லிட்டர் நீருக்கு இரண்டரை மிலி (250 பிபிஎம்) அளவில் கலந்து, விதைத்த 15 ஆம் நாள் முதல் வாரத்திற்கு ஒரு முறை என நான்கு முறை தெளித்து மகசூலை அதிகரிக்கலாம்.

பயிர்ப் பாதுகாப்பு முறை: வண்டுகள் தாக்குவதைத் தடுக்க ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மிலி மாலத்தியான் 50 ஈசி தெளித்து கட்டுப்படுத்தலாம். பழ ஈ தாக்குவதில் இருந்து பாதுகாக்க நன்கு உழவு செய்து பழ ஈ க்களின் கூட்டுப்புழுக்களை வெளிப்படுத்தி அழிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பழங்களை அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும். பழ ஈ தாக்குதல் வெப்ப காலத்தில் மிகக்குறைவாகவும், மழைக் காலத்தில் மிக அதிகமாகவும் இருக்கும். அதற்கேற்ப விதைப்பு தேதியை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்.

ஒரு பாலித்தீன் பையில் 5 கிராம் நனைத்த கருவாடு, ஒரு மிலி டைக்குளோர்வாஸ் நனைத்த பஞ்சு வைத்த கருவாட்டுப் பொறிகளை ஏக்கருக்கு 20 என்ற அளவில் வைத்து பழ ஈக்களைக் கவர்ந்து அழிக்கலாம். 20 தினங்களுக்கு ஒரு முறை நனைத்த கருவாடும், வாரத்திற்கு ஒரு முறை டைக்குனோர்வாஸ் நனைத்த பஞ்சும் மாற்ற வேண்டும்.

லிண்டேன் பூச்சிக்கொல்லி மற்றும் தாமிர, கந்தகப் பூசணக் கொல்லிகள் இப் பயிருக்கு தாவர நச்சாகப் பயிரை பாதிப்பதால் அவற்றை உபயோகிக்கக் கூடாது. 120 தினங்களில் ஏக்கருக்கு 15 டன் தர்ப்பூசணி மகசூல் பெறலாம். எனவே விவசாயிகள் மேற்கண்ட தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து, கோடையில் தாகம் தணிக்கும் தர்ப்பூசணி சாகுபடி செய்து சமுதாயத்திற்கு உதவுவதுடன், உயர் மகசூலும் உன்னத லாபமும் பெறலாம் என்றார் அவர்.

## தென்னை விவசாயம் செழிக்க அரசு உதவுமா?

தமிழகத்தில் தென்னை விவசாயம் செழிக்க மாநில அரசு தங்களுக்கு உதவ வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

நவீன யுகத்தில் தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு, விற்பனை வாய்ப்பு போன்றவற்றில் புதிய முயற்சிகள் அவசியம். தமிழகத்தில் கடலோர மாவட்டங்களான கன்னியாகுமரி, ராமநாதபுரம் பகுதிகளில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் 1958-இல் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்ட அரசின் பண்ணைத் திட்டம், தென்னை மேம்பாடுத் திட்டம் மூலமாக மாநிலம் முழுவதும் தென்னை பரவியது.

தென்னையில் நெட்டை, குட்டை இரண்டு ரகங்கள் இருந்த நிலையில், 1982-இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தியாவின் முதல் ஒட்டுரகம் அதிக விளைச்சல் தரக்கூடியது. தென்னை மரங்களிலிருந்து கிடைக்கும் மட்டை, நார், நார்ப் பொடி, ஈர்க்கு, தேங்காய், கொப்பரை, தொட்டி என அனைத்தும் பல வகைகளில் பயன்படுகின்றன.

பதநீரிலிருந்து கருப்பட்டி, சர்க்கரை, கல்கண்டு, தேங்காய்ப் பாலிலிருந்து ஆயுர்வேத மருந்து, தொட்டியிலிருந்து அலங்காரப் பொருள், நாரிலிருந்து கயிறு, மெத்தை, நார்த் துகளிலிருந்து உரம், தொட்டிக் கரியிலிருந்து கார்பன் போன்ற விலை மதிப்பற்ற பொருள்களும் கிடைக்கின்றன.

உலகளவில் தென்னையின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களுக்குப் போட்டியாக இருக்கும் பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, இலங்கை நாடுகளை விட இந்தியப் பொருள்களின் விலை அதிகமாக உள்ளது. இதற்கு நமது மரங்களின் குறைந்த உற்பத்தித் திறன், தொழில் மற்றும் விவசாய முறைகளில் போதிய நவீன யுக்திகள் வராததே காரணம்.

தென்னை விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களிடம் நிலவும் குறைபாடுகளைப் போக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்கள், புதிய

ரகங்களை அறிமுகப்படுத்த வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு, நிலையான விலை, மானிய உதவிகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வெள்ளக்கோவில் வட்டார தென்னை விவசாயிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

**மக்காச்சோளம் சாகுபடியில் அதிக வருவாய் ஈட்ட....**



நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றி மக்காச்சோளம் பயிரிட்டால் ஏக்கருக்கு இரண்டரை முதல் 3 டன் மகசூல் பெற்று, குறைந்த காலத்தில் அதிக வருவாய் ஈட்டலாம்.

இதுகுறித்து உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர்

பெ.பாஸ்கர் கூறியது:

தைப் பட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி செய்ய கோஎச் (எம்)6 என்ற வீரிய ஒட்டுரகம் பரிந்துரைக்கப்படுகிறது. ஓர் ஏக்கரில் விதைப்பு செய்ய வீரிய ஒட்டு ரகங்களுக்கு 6 கிலோ விதை தேவைப்படும். ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் கார்பெண்டாசிம் அல்லது 4 கிராம் திரம் கொண்டு விதை நேர்த்தி செய்து, ஏக்கருக்கு 8 கிலோ விதையுடன் 2 பாக்கெட் அசோஸ்பைரில்லத்தை ஆறிய கஞ்சியுடன் கலந்து, நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்துக்குள் விதைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 60 செமீ இடைவெளியும், செடிக்கு செடி 25 செமீ இடைவெளி விட்டு விதைக்க வேண்டும். ஏக்கருக்கு மொத்த செடிகளின் எண்ணிக்கை 26,667 இருக்குமாறு பராமரித்தால் உயர் விளைச்சல் பெறலாம்.

களைக் கட்டுப்பாடு, பின்செய் நேர்த்தி: நடவு செய்த மூன்று நாள்கள் கழித்து ஏக்கருக்கு அட்ரசின் 50 சதம் நனையும் தூள் 200 கிராம் தெளிக்க வேண்டும். மண்ணில் போதுமான அளவில் ஈரப்பதம் இருக்கும் போது களைக்கொல்லியை

தெளிக்க வேண்டும். களைக்கொல்லி பயன்படுத்தாவிடில் நடவு செய்த 17 அல்லது 18-ஆவது நாளில் கைக்களை எடுக்க வேண்டும்.

உரமிடுதல்: மண் பரிசோதனைக்கு ஏற்ப தழை, மணி, சாம்பல் சத்துகள் இட வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட உர அளவில் கால் பங்கு தழைச்சத்து, முழு அளவு மணிச்சத்து, சாம்பல் சத்துகளை அடியுரமாக இட வேண்டும்.

விதைத்த உடனும், 4ஆம் நாளிலும் நீர்பாய்ச்ச வேண்டும். அதன்பிறகு, மண்ணின் தன்மைக்கேற்ப அதாவது களிமண் நிலமாக இருந்தால் வளர்ச்சிப் பருவத்தில் 12, 25, 36ஆம் நாள்களிலும், பூக்கும் பருவத்தில் 48, 60ஆம் நாள்களிலும், முதிர்ச்சி பருவத்தில் 72 ஆம் நாள்களிலும் நீர்பாய்ச்ச வேண்டும்.

பயிர் பாதுகாப்பு: முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் இலைக்கும், தண்டுக்கும் இடையே குடைந்து சென்று நடுக்குருத்தை தாக்குவதால், நடுக்குருத்து காய்ந்து அழுகி விடும். வெள்ளை நிறத்தில் உள்ள குருத்து ஈயைக் கட்டுப்படுத்த விதைகளை இமிடாகுளோபிரிட் மருந்தினால் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். குருத்து ஈயின் தாக்குதல் தென்பட்டவுடன், ஏக்கருக்கு டைமிதோயேட் 200 மில்லி லிட்டர் அல்லது வேப்பங்கொட்டை கரைசல் 5 சதம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை தேவையான அளவு தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும்.

இதுதவிர, குருத்துப்புழு, சாம்பல் வண்டுகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு நான்கு கிலோ பாசலோன் 4டியை 16 கிலோ மணலுடன் கலந்து இலை, தண்டுப் பகுதி சேருமிடங்களில் உள்ள இடைவெளியில் இட வேண்டும். இலைகளில் தோன்றும் புள்ளிகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு மான்கோசெப் 400 கிராம் மருந்தைத் தெளிக்க வேண்டும்.

இதுபோன்ற தொழில்நுட்பங்களைப் பின்பற்றி மக்காச்சோளம் சாகுபடி செய்தால் வீரிய ஒட்டு ரகத்தில் இருந்து ஏக்கருக்கு இரண்டரை முதல் 3 டன் தானிய மகசூல் பெறலாம் என்றார் அவர்.

## வலுவடைகிறது காற்றழுத்தத் தாழ்வு நிலை: கடலோர மாவட்டங்களில் மழை வாய்ப்பு

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவடைந்து வருகிறது. இதன் காரணமாக வியாழக்கிழமை கடலோர மாவட்டங்களின் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலின் தென்கிழக்குப் பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அது அடுத்த 24 மணி நேரத்துக்குள் வலுவடைந்து தாழ்வு பகுதியாக மாறும் என்று வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் அடுத்த சில நாள்களுக்கு கடலோர மாவட்டங்களில் தொடர் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை வழக்கத்தை விட 33 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளது.

இந்நிலையில், வங்கக்கடலில் உருவாகியுள்ள தாழ்வு நிலை வலுவடைந்து தமிழகத்தை நோக்கி நகர்ந்தால் ஓரளவு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வானிலை முன்னறிவிப்பு: கடலோர மாவட்டஙகளில் சில இடங்கள் மற்றும் புதுச்சேரியில் வியாழக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. காலையில் பனிப்பொழிவு இருக்கும்.

## சென்னையில் பூக்கள் விலை உயர்வு

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் வரத்து குறைந்ததால் பூக்களின் விலை அதிகரித்துள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு மதுரை, பெங்களூர், ஆந்திர மாநிலம் கடப்பா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து லாரி உள்ளிட்ட வாகனங்களில் பூக்கள் தினமும் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

இந்த நிலையில் புதன்கிழமை முல்லை, மல்லிகை உள்ளிட்ட பெரும்பாலான பூக்கள் கடந்த 2 வாரங்களைக் காட்டிலும் விலை உயர்ந்து காணப்பட்டது.

இது குறித்து கோயம்பேடு பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தலைவர் அருள்விசுவாசம் கூறியது: கடந்த அக்டோபர் மாதம் சரஸ்வதி பூஜை, விஜயதசமி உள்ளிட்ட பண்டிகைகள் நடைபெற்றதால் முல்லை, மல்லிகை உள்ளிட்ட பூக்கள் கிலோ ரூ.900 வரை விற்பனையானது. அதைத் தொடர்ந்து சுப முகூர்த்த தினங்கள் மற்றும் கோயில் விழாக்கள் குறைவாக இருந்ததால் பூக்களின் விலையில் சரிவு ஏற்பட்டது. இதேநிலை தொடர்ந்து நீடித்ததால் ஒரு கிலோ மல்லிகை ரூ.120 வரை விற்கப்பட்டது. கடும் பனிப்பொழிவு காரணமாக இப்போது பூக்கள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மார்க்கெட்டுக்கு வழக்கமாக தலா 20 டன் வரை கொண்டுவரப்பட்ட முல்லை, மல்லிகை பாதியாகக் குறைந்துள்ளது. வரத்து குறைந்ததால் விலை உயர்ந்துள்ளது என்றார்.

இதனால் பூ மாலைகளின் விலையும் அதிகரித்துள்ளது. சம்பங்கி மலர்களைக் கொண்டு தொடுக்கப்படும் சிறிய ரக மாலை ரூ.50 முதல் ரூ.800 வரையிலும், ரோஜா மாலை ரூ.150 முதல் 2 ஆயிரம் வரையிலும் விற்கப்படுகிறது.

சென்னை கோயம்பேடு பூ மார்க்கெட்டில் புதன்கிழமை நிலவரப்படி பூக்களின் விலை விவரம் (பழைய விலை அடைப்புக்குறிக்குள், கிலோவில்):

{ மல்லிகை-ரூ.450 (300) { முல்லை-ரூ.350 (250)

{ சம்பங்கி-ரூ.70 (50) { ரோஜா- ரூ.80 (60)

{ அரளி- ரூ.100 (70) { கனகாம்பரம்-ரூ.350 (250)

### "முட்டை: காலாவதி தேதி அச்சிட வேண்டும்'

கடைகளில் விற்கப்படும் கோழிமுட்டைகள் அனைத்திலும் அவற்றின் காலாவதி தேதியை அச்சிட வேண்டும் என நுகர்வோர் அமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் கோபாலகிருஷ்ணன் தலைமையில், உணவுப் பாதுகாப்பு குறித்த ஆலோசனை கூட்டம், சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர் இதில் பங்கேற்றனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டமைப்பின் பொதுச் செயலர் நிஜாமுதீன் கூறியதாவது:

டீக்கடைகள், கடற்கரைகள், சுற்றுலா தலங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் விற்கப்படும் எண்ணெய் பதார்த்தங்களின் தரத்தை தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டும்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கோழி முட்டைகளில் உள்ளதைப் போல, உள்ளூர் கடைகளில் விற்கப்படும் முட்டைகளிலும் காலாவதி தேதியை குறிப்பிட வேண்டும். காலியாக உள்ள உணவுப் பாதுகாப்பு ஆய்வாளர் பணியிடங்களை விரைவில் நிரப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக அரசு அதிகாரிகள் தெரிவித்தனர் என்றார் அவர்.

### வேளாண் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சி அமைச்சகத்தின் நிதி உதவியோடு உணவு மற்றும் தங்கும் வசதியுடன் இப்பயிற்சி இலவசமாக வழங்கப்படுகிறது. 18 வயது முதல் 35 வயதுடைய, குறைந்தபட்சம் வேளாண்மையில் பட்டயப்படிப்பு முடித்தவர்கள் பங்கேற்கலாம். வேளாண் பட்டப்படிப்பு மற்றும் அறிவியல் சார்ந்த பாடங்களில் பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டம் முடித்தவர்களும் பங்கு பெறலாம். இப்பயிற்சி முடித்தபின், பயனாளிகள் தொழில் துவங்குவதற்கான சிறந்த திட்டவரைவு வைத்திருந்தால், அவர்கள் மாவட்ட தொழில் மையம் மற்றும் வங்கிகள் மூலம் நிதி உதவிபெற பரிந்துரைக்கப்படுவர்.

விதை உற்பத்தி, பூச்செடிகள், மரக்கன்றுகள் வளர்ப்பு, உயிர் உரங்கள் உற்பத்தி, காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு, உணவு பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டும் தொழில்நுட்பங்கள், நுண்ணிய பாசனம் மற்றும் பசுமை குடில் தொழில்நுட்பங்கள், வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல், நிதி மேலாண்மை, திட்ட அறிக்கை தயாரித்தல பற்றிய பாடங்களும் செயல்முறை விளக்கங்களும் அளிக்கப்படும்.

விருப்பமும் ஆர்வமும் உள்ள தகுதியுடையவர்கள், தங்களது பெயரை முதல்வர், விவசாயக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை என்ற முகவரியில், தொலைபேசி எண்.(0452)2422956 என்ற எண்ணிலோ அல்லது அலைபேசியில் 8754213353 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு பயிற்சி துவங்குவதற்கு முன்தகவல் தெரிவிக்கப்படும், என மதுரை விவசாயக்கல்லூரி முதல்வர் சி.சின்னுசாமி தெரிவித்துள்ளார்.

**கோமாரி நோயால் இறந்த மாடுகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்**

தேனியில் கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தேனி வட்டாரத் தலைவர் ராமராஜ் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் டி. கண்ணன் முன்னிலை வகித்தார். கோரிக்கையை வலியுறுத்தி, மாவட்டச் செயலர் என். சுருளிநாதன், பொருளாளர் வி. முருகன், நிர்வாகிகள் பி. ராமன், போஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழு உறுப்பினர் கே. ராஜப்பன் ஆகியோர் பேசினர்.

மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்கி இறந்த கறவை மாடுகள் மற்றும் சினை மாடுகளுக்கு தலா ரூ. 30 ஆயிரம், ஆடுகளுக்கு தலா ரூ. 5 ஆயிரம் என இழப்பீடு வழங்கவேண்டும். கால்நடைகளுக்கு தரமான தடுப்பு மருந்துகளை வழங்கவேண்டும். கால்நடை மருத்துவமனை மற்றும் துணை மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்களை நியமிக்கவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

இதில், போடி வட்டாரச் செயலர் எஸ். செல்வம், பால் உற்பத்தியாளர் சங்க மாநிலக் குழு உறுப்பினர் கே. செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விலை உயர்வை எதிர்நோக்கி காத்திருக்கும் வாழை விவசாயிகள்**

பொங்கல் பண்டிகை வருவதையொட்டி வாழை இலை, காய்களுக்கு கூடுதல் விலை கிடைக்கும் என விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் சாலூர், உசிலம்பட்டி, கூட்டுறவுபட்டி, கண்டாங்கிபட்டி, வேலாங்கபட்டி, இடையமேலூர், நாயத்தான்பட்டி, வல்லவன்காலனி உள்பட பல்வேறு இடங்களில் வாழை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு விளையும் வாழை இலை மற்றும் காய்களை மேலூர் சாலையில் உள்ள வி.மலம்பட்டியில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த சந்தையிலிருந்து வாழை இலை மற்றும் காய்களை காரைக்குடி, தேவகோட்டை, தொண்டி, திருவாடனை, பரமக்குடி, திருப்பத்தூர் மற்றும் நத்தம் பகுதி வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்.

புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வாழை இலைக் கட்டு ஒன்று ரூ.100 முதல் ரூ.150 வரையிலும், வாழைக் காய்கள் ஒரு தார் ரூ.100 முதல் ரூ.150 என்ற அளவிலும் கிடைத்து வந்தது. உரம் விலை ஏற்றம், கூலி என ஒரு தாருக்கு ரூ.80 வரை செலவுகள் செய்து வரும் நிலையில் மார்கழி மற்றும் தை மாதங்கள், திருமண முகூர்த்த காலங்களில் வாழை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வாழை விவசாயத்தை விவசாயிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். தற்போது வாழை இலை கட்டு, வாழை தார் ரூ.150 என்ற அளவில் சந்தையில் ஏலம் போகின்றது. பொங்கல் பண்டிகை வருவதையொட்டி வாழை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பதனால் சந்தைக்கு இலை மற்றும் காய்களை கொண்டு வருவதை தற்போது விவசாயிகள் குறைத்துள்ளனர்.

வரத்து குறைந்துள்ளதால் கடந்த வாரம் ரூ.நூறுக்கு விற்கப்பட்ட வாழை பொருள்கள் செவ்வாய்க்கிழமை சந்தையில் ரூ.150 வரையிலும் விற்கப்பட்டன.

வரும் வாரங்களில் வாழை பொருள்களுக்கு இன்னும் கூடுதல் விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

### தைப்பொங்கலுக்கு தயார்நிலையில் மஞ்சள் கொத்து

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பகுதியில் தைப்பொங்கல் அறுவடைக்கு மஞ்சள் கொத்துச் செடிகள் தயார் நிலையில் உள்ளன.

தைப் பிறந்து விட்டால் மண்பானை, கரும்பு, மஞ்சுவிரட்டு மணி, கயிறு, மஞ்சள்கொத்து போன்ற பொருள்களின் விற்பனை அதிகரிக்கும்.

இந்த வகையில் திருப்பத்தூர் அருகே நயினார்புரத்தில் பொங்கல் பண்டிகைக்காக

மஞ்சள் கொத்துகள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. பொங்கல் பண்டிகைக்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக அறுவடை செய்யப்பட்டு சிவகங்கை, காரைக்குடி, பள்ளத்தூர், திருப்பத்தூர் சந்தைகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. நடப்பாண்டில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் மஞ்சள்கொத்து ஒன்று ரூ.20 லிருந்து 25 ரூபாய் வரை விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 55 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 55 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 160 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,150 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 5.7 டி.எம்.சி.

### கோழிக் குஞ்சுகளுக்கு செயற்கை வெப்பம் அவசியம்

குளிர் அதிகரிக்கும் என்பதால், பண்ணைகளில் கோழிக் குஞ்சுகளுக்கு செயற்கை வெப்பம் அளிக்க வேண்டும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (ஜனவரி 1 முதல் 3-ஆம் தேதி வரை) வானம் லேசான மேகமூட்டத்துடனும், மழையின்றியும் காணப்படும்.

காற்றின் திசைவேகம் மணிக்கு 4 கிமீ முதல் 6 கிமீ வேகத்தில் தென்கிழக்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 62.6 டிகிரி ஃபாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 87.8 டிகிரி ஃபாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 43 சதம் முதல் அதிகபட்சம் 77 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு நாமக்கல் வானிலையில் அடுத்த மூன்று நாள்களுக்கு குறைந்தபட்சம் வெப்பம் 62.6 டிகிரி ஃபாரன்ஹீட் அளவில் காணப்படும் என்பதால், கோழிக் குஞ்சுகளுக்கு சரியான செயற்கை வெப்பம் கொடுக்க வேண்டும். இதனால், சரியான தீவனம் எடுக்க உதவி, எடை குறையாமல் இருக்கச் செய்யும். இதன்மூலம், கோழிகள் பின்னாளில் சீரான எடையை அடைந்து தரமான முட்டைகள் இட  ஏதுவாக அமையும்.

வேளாண் விவசாயிகளுக்கு தற்போதைய காலநிலையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிரில் இலைச் சுருட்டுப் புழு, குருத்துப் பூச்சியின் தாக்குதல் பரவலாகக் காணப்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் அல்லது புரோப்பனோஃபாஸ் பூச்சிக் கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கரும்புக்கு அரசு அறிவித்த விலை கோரி ஆர்ப்பாட்டம்

கரும்புக்கு தமிழக அரசு அறிவித்துள்ளபடி டன்னுக்கு ரூ 2,650 வழங்கக் கோரி கரும்பு விவசாயிகள் துகிலியில் உள்ள தனியார் சர்க்கரை ஆலை முன் புதன்கிழமை கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம், ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கும்பகோணம் அருகேயுள்ள துகிலி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்புகள் துகிலி தனியார் சர்க்கரை ஆலைக்கு அரவைக்காக வெட்டப்படுகின்றன.

கரும்புக்கான கொள்முதல் விலையாக டன்னுக்கு தமிழக அரசு ரூ. 2,650 ஆக அறிவித்தும், ஆலை நிர்வாகமோ இதுவரை தமிழக அரசாணை தங்களுக்கு

வரவில்லை எனக் கூறி டன்னுக்கு ரூ. 2,100 மட்டுமே வழங்க முடியும் எனத் தெரிவித்துள்ளதாம். ஆனால், ஏற்கெனவே டன்னுக்கு ரூ 3 ஆயிரம் கோரி கரும்பு விவசாயிகள் போராடி வரும்வேளையில் அரசு அறிவித்த கொள்முதல் விலையைவிட குறைவாக வழங்க முன்வரும் ஆலை நிர்வாகத்தைக் கண்டித்து ஆலை முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் முழு தொகை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஒருநாள் அடையாள உண்ணாவிரத்தையும் மேற்கொண்டனர்.

மீத்தேன், நிலக்கரி பேரழிவிற்கு எதிரான இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் முருகன் தலைமைவகித்துப் பேசுகையில், கரும்புக்கு ரூ. 2,650 வழங்குவதை ஆலை நிர்வாகம் ஏற்றுக்கொள்ளும் வரை கரும்புகளை வெட்ட அனுமதிக்க மாட்டோம் என்றார்.

### வேளாண் இயந்திரக் குழு; முழு மானியத்தில் கருவிகள் இளைஞர்கள், விவசாயிகள் உறுப்பினராகலாம்

பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ள வேளாண் இயந்திரக் குழுவில் கிராமப்புற இளைஞர்கள், குறு, சிறு விவசாயிகள் வரும் 10-ம் தேதிக்குள் உறுப்பினராகலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அகமது வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் கிராமப்புற இளைஞர்கள், குறு, சிறு விவசாயிகள் 16 நபர்களைக் கொண்ட வேளாண் இயந்திரக் குழு அமைக்கப்பட உள்ளது. இந்த குழு 4 உப குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் பவர் டில்லர், நாற்று நடும் இயந்திரம், மானாவாரி பயிர் களை எடுக்கும் கருவி, நெல் களை எடுக்கும் கருவி, உழவில்லா விதைப்புக் கருவிகள் முழு மானியத்தில் வழங்கப்படும். குழு உறுப்பினர்களுக்கு இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும் 10 நாள்கள் பயிற்சி அளிப்பதோடு, சங்கங்களின் பதிவு சட்டப்படி குழு பதிவு செய்யப்படும். மேற்கண்ட இயந்திரங்களை விவசாய பணிகளுக்கு பயன்படுத்தி, அதன்மூலம் பெறப்படும் வாடகைத் தொகையை கொண்டு குழு உறுப்பினர்கள் வருமானம் பெறலாம்.

குழுவின் பெயரில் வரவு-செலவினங்களை நிர்வாகம் செய்ய, தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்கப்படும்.

வாடகை வருவாயிலிருந்து இயந்திரங்கள் பராமரிப்பு, எரிபொருள் உள்ளிட்ட செலவினங்கள் மேற்கொள்ளப்படும். எஞ்சிய வருவாயை உறுப்பினர்களின் சம்பளம், சங்கத்தின் செயல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம். இதுதொடர்பாக, வேளாண்மை பொறியியல் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். மேற்கண்ட நிபந்தனைகளுடன் அமைக்கப்படும் குழுவின் உறுப்பினர்கள் உடல் தகுதியுடன் 40 வயதுக்குள்பட்டு, குறைந்தபட்சமாக 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று, விவசாய பணியை மட்டுமே முழு நேரப்பணியாக கொண்ட ஊரக இளைஞர்கள், குறு, சிறு விவசாயிகளாக இருக்க வேண்டும். குழு உறுப்பினர்கள் நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். குழுவில் உறுப்பினராகி பணி செய்ய விருப்பமுள்ளவர்கள், வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சிறு, குறு விவசாயி அல்லது முழுநேர விவசாய தொழிலாளி சான்றுடன் ஜன. 10-ம் தேதிக்குள், உதவிச் செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல் துறை) வி.ஜி.எம். அபார்ட்மெண்ட், பள்ளிவாசல் தெரு, கே.கே.நகர், துறைமங்கலம், பெரம்பலூர் என்ற முகவரியில் உள்ள (தொலைபேசி எண்- 04328 224351) அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

### பயிர்க் காப்பீட்டுத் தொகை கோரி தி.க. ஆர்ப்பாட்டம்

கடந்த ஆண்டுக்குரிய பயிர்க் காப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, திருவாரூரில் செவ்வாய்க்கிழமை திராவிடர் கழக விவசாய சங்கம், விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன், திராவிடர் கழக செயல் அவைத் தலைவர் அறிவுக்கரசு தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும், கூட்டுறவுக் கடனை ரத்து செய்ய வேண்டும். கோமாரி நோய்த் தாக்கி உயிரிழந்த ஆடு, மாடுகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். மஞ்சள்

மற்றும் பூஞ்சை நோய்த் தாக்கி பாதிக்கப்பட்ட சம்பா பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில், திமுக மாவட்டச் செயலர் கலைவாணன், திராவிடர் கழக மாவட்ட விவசாய அணி செயலர் கணேசன், பொதுச் செயலர் ஜெயகுமார்,

மாவட்டத் தலைவர் மோகன், மண்டல தலைவர் ராஜகோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நெல் கொள்முதலில் அரசு மந்தம்: விவசாயிகளுக்கு பெரும் இழப்பு**

நெல் கொள்முதலில் அரசு அமைப்புகள் மந்த கதியில் செயல்படுவதால், மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலைக் காட்டிலும் குறைவாக அரிசி ஆலை அதிபர்களுக்கும் தனியார் வியாபாரிகளுக்கும் விவசாயிகள் நெல்லை விற்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

அரசு கொள்முதல் மையங்களில் நீண்ட காலம் காத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, மண்டிகளில் குறைந்தபட்ச ஆதரவு விலையான குவிண்டாலுக்கு ரூ.1,130-ஐக் காட்டிலும் குறைவாக அரிசி ஆலை அதிபர்களிடம் நெல்லை விவசாயிகள் விற்று வருவதாக பர்கர், சம்பல்பூர், காலஹண்டி, பொலாங்கிர் ஆகிய மாவட்டங்களில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நெல் குவிண்டாலுக்கு ரூ.900 முதல் ஆயிரம் வரை விலை வைத்து அரிசி ஆலை அதிபர்கள் கொள்முதல் செய்து வருகின்றனர். ஆனால் தனியார் வியாபாரிகளோ வீடு வீடாகச் சென்று இதைக்காட்டிலும் குறைவான விலையில் கொள்முதல் செய்து வருகின்றனர் என்று சட்டப்பேரவை பாஜக தலைவர் ஜெய்நாராயண் மிஸ்ரா புகார் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியது: அரசால் திறக்கப்பட்டிருக்கும் நெல் மண்டிகளில் ஒழுங்குமுறை விற்பனைக் கூட ஊழியர்கள் ஒருவர்கூட கண்ணில் தென்படவில்லை. அரிசி ஆலை அதிபர்களின் முகவர்கள்தான் இந்த மண்டிகளை நிர்வகித்து வருகின்றனர்.

மண்டிகளுக்கு அதிக அளவில் நெல் வரத்து இருக்கிறது. இந்த நிலையில் நியாயமான சராசரி தர விதிமுறைகளின் கீழ் எடை போடும்போது குவிண்டாலுக்கு 5 முதல் 7 கிலோ வரை குறைத்துத்தான் கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் கடுமையான இழப்புக்கு ஆளாகின்றனர் என்று அகில ஒடிஸாவிவசாயிகள் சங்க நிர்வாகி அசோக் பிரதானும் புகார் தெரிவித்துள்ளார்.

நெல்லை விற்றவுடன் உடனே விவசாயிகளுக்குப் பணம் கிடைப்பதில்லை. பரிவர்த்தனை மிகவும் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆன்லைன் மூலமே பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. இதனால் நெல் விற்ற பணத்தைப் பெற ஒன்று முதல் இரு வாரங்கள் வரை விவசாயிகள் காத்திருக்க வேண்டும். விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக பணம் டெபாசிட் செய்யப்படுகிறது.

நெல் குவிண்டாலுக்கு சிறப்புத் தொகையாக ரூ.100 வழங்கப்படும் என முதல்வர் நவீன் பட்நாயக் பர்கரில் அண்மையில் அறிவித்தார்.

ஒரு குவிண்டால் (100 கிலோ) எடை கொண்ட நெல் மூட்டைக்கு சராசரியாக 5 கிலோ எடையைக் குறைத்துத்தான் கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு கடும் இழப்புதான் ஏற்படுகிறது என்று ஜெய்நாராயண் மிஸ்ரா குறிப்பிட்டுள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

விவசாயிகள் பயமின்றி நெல் சாகுபடியில் ஈடுபடலாம்




மதுரைக்கு அருகில் மேலூரில் வைகை அணைக்கட்டில் தண்ணீர் திறந்ததும் விவசாய பணிகள் அனைத்தும் துவங்கப்பட்டன. எடீடி 36, எடீடி 39, எடீடி 45, வெள்ளைப் பொன்னி, ஜே 13 மற்றும் ஜேசிஎல் நெல் ரகங்களை நடவு செய்து இரண்டு மாத பயிராக உள்ளது. அணைக்கட்டில் தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் துணிவே துணை என்று மழையை நம்பிக் கொண்டு இருக்கின்றனர். ஏற்கனவே மதுரை மாவட்ட விவசாயிகள் ஒரு ஏக்கரில் 40லிருந்து 45 மூட்டைகள் மகசூல் எடுத்துள்ளார்கள்.

இப்போது விவசாயிகள் அதே போல் மகசூல் எதிர்ப்பார்க்கிறார்கள். அணைக்கட்டில் தண்ணீரே இல்லாததால் சற்று தளர்ந்து உள்ளனர். மழை வரும் என்று மிக நம்பிக்கையோடு இருக்கின்றனர். நெல் ரகங்களாகிய ஆடுதுறை 36, ஆடுதுறை 45 இவைகளின் விதைகளை முளை கட்டி சேற்றில் நேரிடையாக விதைக்க இருக்கிறார்கள். அடியுரம், மணிச்சத்து மட்டும் போட இருக்கிறார்கள். பொடி செய்யப்பட்ட ஜிங்க் சல்பேட்டினை மண்ணுடன் கலந்து வயலில் தூவ வேண்டும். பிறகு சமப்படுத்தி பாத்தி அமைத்து நிலத்தை சரி செய்தனர். இரண்டு

பாத்திகளுக்கு இடையில் ஒரு சர்வே கல்லிணை இழுக்க வேண்டும். இதில் முளைகட்டிய விதை விதைக்கப்பட்டது. உடனே சார்ட்டன் களை இடப்பட்டது. பயிர் வளர்ந்த பின் பயிரை கலைத்து விடப்பட்டது. வயலில் யூரியா உரம் இடப்பட்டது. மழையை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். விவசாயிகள் துணிச்சலோடு உள்ளனர்.

விவசாயிகள் நெல் தரிசில் பயறு, உளுந்து தெளிக்க இருக்கின்றனர். பூமி மெழுகு பதத்தில் இருக்கும்போது உளுந்து ரகங்கள் எடீடி 2, எடீடி 3 மற்றும் எடீடி 5 விதைக்கலாம். மணற்பாங்கான வடிகால் வசதி இவைகளது உதவியோடு விதைக்க வேண்டும். 90 நாட்களில் அறுவடை வர வாய்ப்பு வரும். மகசூலும் கிடைக்கும். நிலத்திற்கு ஏடிபி உரம் இடவேண்டும். சங்கு பருவத்தில் ஏடிபி 20 கிலோ இடலாம். சாகுபடி செலவு ரூ.4,000 வரை ஆகும். சுமார் 500 கிலோ மகசூல் கிடைக்கும். நிகர லாபம் ரூ.5,000 வரை கிடைக்கும். விவசாயம் என்பது ஒரு சூதாட்டம் தான். நாம் நினைப்பது போல் எல்லாம் இருந்து விடாது. மழையை வராது என்ற எண்ணம் இருக்கக் கூடாது. உங்களுக்கு தற்போது தேவை துணிவு.

- எஸ்.எஸ்.நாகராஜன்

சத்துக்களை கரைக்கும் நுண்ணுயிரிகள்

ஊட்டச்சத்துக்கள் பயிர்களின் வளர்ச்சிக்கு அவசியம். மண்ணில் உள்ள தழை, மணி, சாம்பல் சத்துக்கள், பயிர்களுக்கு அதிகளவில் தேவைப்படும். சாம்பல் சத்து எனப்படும் பொட்டாசியம் சத்து, பயிர்களுக்கு முக்கியம். இவை, பூச்சி நோய் தாக்குதலுக்கு, எதிர்ப்புத் திறனைத் தரும். தானியப் பயிர்களின் தண்டுப்பகுதிகள் சாயாமல், உறுதியாக இருக்கவும் உதவுகிறது.

சாம்பல் சத்து குறைந்தால்:

பயிர்கள் வளர்ச்சி அடையாமல் குட்டையாக, வெளிறி காணப்படும். இலைகளின் நுனி, ஓரங்கள், நரம்பின் இடைப்பகுதியிலும் செம்பழுப்பு நிறமாக மாறி, இலைகள்

கருகிவிடும். முதிர்ந்த இலைகளில் அறிகுறிகள் தென்பட்டு, இளம் இலைகளையும் தாக்கும். உருளை, தக்காளி, ஆப்பிள், சர்க்கரை வள்ளிக் கிழங்கு மற்றும் தானிய வகைப் பயிர்களில் விளைச்சல் குறையும்.

சாம்பல் சத்துக் குறைபாட்டின் அறிகுறி தென்படும் போது, பொட்டாஷ் "மொபிலைஸர்' உயிர் உரத்தை பயன்படுத்தலாம். இதன்மூலம் சாம்பல் சத்து உபயோகத்தை சரிபாதியாக குறைக்கலாம். இந்த உயிர் உரத்தில் உள்ள "பிராசூரியா ஆரன்டியா' பாக்டீரியா, பொட்டாசியத்தை கரைக்க வல்லது.

நெல், கரும்பு, வாழை, கிழங்கு வகைகள், மஞ்சள், காய்கறி தானியப் பயிர்கள், மலைப் பிரதேச பயிர்களுக்கு உயிர் உரத்தைப் பயன்படுத்தலாம்.

விதைநேர்த்தியின் போதும், நாற்றங்கால், நடவு வயலிலும் உயிர்உரத்தை இடலாம். பிற உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியாவுடன் கலந்தும் இடலாம். மதுரை விநாயகபுரம் நீர் மேலாண்மை பயிற்சி நிலையம் மற்றும் கோவை வேளாண் பல்கலை நுண்ணுயிரியல் துறையில், உயிர் உரங்களைப் பெறலாம்.

-கி.ராஜேந்திரன்,

வேளாண் துணை இயக்குனர், மதுரை.

**சின்ன சின்ன செய்திகள்**



நெல்விதைகள் விற்பனைக்கு: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு ஆதார மற்றும் உண்மைநிலை விதைகள், விதை உற்பத்தியாளர்களுக்கு

வினியோகம் செய்ய தயார் நிலையில் உள்ளது.

(தகவல்: விதை மையம், த.வே.பல்லைக்கழகம், மேட்டுப்பாளையம் - 641 301, கோயமுத்தூர். போன்:0422 - 661 1232, 661 1432)

மரங்களுக்கு விலை நிர்ணயம்: இல்லாதது குறித்து மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி பேராசிரியர் பார்த்திபன் தெரிவிப்பது - "மலைவேம்பு, சவுக்கு, பெருமரம், சூபாபுல், தைலம், குமிழ், சிசு ஆகிய ஏழு வகையான மரங்களே தமிழகத்தில் 70 சதவீதம் நிலங்களில் பயிரிடப்படுகின்றன. காகித ஆலைகள், பிளைவுட், நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்த ஏழுவகை மரங்களுக்கு குறைந்தபட்ச ஆதாரவிலையை நிர்ணயித்து உள்ளது.

மேட்டுப்பாளையத்தில் உள்ள வன இயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 31 நாட்களில் 19 அடி சரிவு

மேட்டூர்: நீர்வரத்து குறைந்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம், 31 நாளில், 19 அடி சரிந்துள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில், வறட்சியால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து, 1,000 கனஅடிக்கும் குறைவாக சரிந்தது. இதனால், கடந்த மாதம், 1ம் தேதி, 85 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம், நேற்று, 66 அடியாக சரிந்தது. நீர் இருப்பு, 29 டி.எம்.சி.,யாக உள்ளது. ணைக்கு, 819 கன அடி நீர், நேற்று வந்தது. கடந்த, 31 நாட்களில் அணை நீர்மட்டம், 19 அடியும், நீர்இருப்பு, 17 டி.எம்.சி.,யும் சரிந்துள்ளது. மேட்டூர் அணையில் இருந்து, கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு திறக்கப்பட்ட நீர் நேற்று முன்தினம் மாலை நிறுத்தப்பட்டது. கடந்த அக்டோபர் முதல் டிசம்பர், 31 வரை, கால்வாயில், 8 டி.எம்.சி., நீர் திறக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் நீர்மட்டம் நீர்மட்டம் : 66 அடி நீர் இருப்பு : 29 டி.எம்.சி.,

நீர்வரத்து : 819 கனஅடி திறப்பு : 9,000 கனஅடி

## கரும்பு விவசாயிகள் போராட்டம் நடத்த...முடிவு! அரசு அறிவித்த விலை வழங்க கோரிக்கை

நெல்லிக்குப்பம்:கரும்புக்கு அரசு அறிவித்த விலையை உடனே வழங்கா விட்டால் போராட்டம் நடத்தப் போவதாக விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

இந்தியா முழுவதும் பல லட்சம் ஏக்கர் பரப்பில் விவசாயிகள் கரும்பு பயிரிட்டு வருகின்றனர். ஆண்டுதோறும் மத்திய அரசு கரும்புக்கான ஆதார விலையை அறிவிக்கும். இவ்விலை ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரும். ஒவ்வொரு மாநில அரசும் தங்கள் மாநிலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப கூடுதல் விலையை அறிவிக்கும்.

தமிழகத்தில் தி.மு.க., ஆட்சியில் விவசாயிகள் ஆலை நிர்வாகம், அரசு அதிகாரிகள் அடங்கிய முத்தரப்புக் குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தி விலையை முடிவு செய்வார்கள்.

அ.தி.மு.க., ஆட்சிக்கு வந்த பிறகு முத்தரப்புக் கூட்டம் நடத்தாமலேயே அரசே விலையை அறிவித்து வருகிறது. 2010 - 11ம் ஆண்டு மத்திய அரசு டன்னுக்கு 1,391 ரூபாய் அறிவித்தது.

தமிழக அரசு 509 கூடுதலாக்கி 1,900 ரூபாய் விலை அறிவித்தது. 2011-12ல் மத்திய அரசு 1,450ம், தமிழக அரசு 2,000 ரூபாய் என அறிவித்தது. 2012-13ல் மத்திய அரசு 1,700ம் தமிழக அரசு 2,350 ரூபாய் அறிவித்தது.

இதில் போக்குவரத்து செலவு 100 ரூபாய் போக விவசாயிக்கு டன்னுக்கு 2,250 ரூபாய் கிடைத்தது. 2013-14 நடப்பு ஆண்டுக்கு கடந்த ஆண்டைவிட மத்திய அரசு 400 ரூபாய் உயர்த்தி டன்னுக்கு 2,100 ரூபாய் அறிவித்தது. தமிழக அரசு 2,650 ரூபாய் அறிவித்துள்ளது.

இதில் போக்குவரத்து செலவு 100 ரூநாய் போக கரும்புக்கு 2,550 ரூபாய் கிடைக்கும். இவ்விலை கடந்த ஆண்டைவிட 300 ரூபாய் மட்டுமே அதிகமாகும்.

மத்திய அரசு கூட்டிய 400 விலையைக் கூட தமிழக அரசு கூட்டாததால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இதுபற்றி விவசாயிகள் சங்க நிர்வாகி ராமலிங்கம் கூறியதாவது:

மின் தட்டுபாடு, தாறுமாறான உர விலை உயர்வு, ஆட்கள் பற்றாக்குறை போன்ற பல்வேறு பிரச்னைகளிடையே கரும்பு பயிரிட்டு வருகிறோம். கடந்த ஆண்டை விட 300 ரூபாய் மட்டுமே விலையை உயர்த்தியது ஏமாற்றத்தை அளிக்கிறது. கடந்த ஆண்டைவிட சர்க்கரை உற்பத்தி பல லட்சம் டன்கள் குறைந்துள்ளது. கட்டுப்படியான விலை கிடைக்காததால் வரும் காலங்களில் கரும்பு பயிரே இல்லாத நிலை ஏற்படும். விவசாய சங்கப் பிரதிநிதிகளை முதல்வர் அழைத்துப் பேசி டன்னுக்கு 3,500 ரூபாய் விலை நிர்ணயித்தால் மட்டுமே கரும்பு விவசாயிகளைக் காப்பாற்ற முடியும்.

தமிழக அரசு அறிவித்த விலை கடந்த அக்டோபர் 1ம் தேதி முதல் பொருந்தும். ஆனால், இதுவரை தமிழக அரசு அறிவித்த விலையை ஆலை நிரிவாகங்கள் வழங்கவில்லை. உடனடியாக அரசு அறிவித்த விலையை ஆலைகள் வழங்கா விட்டால் போராட்டம் நடத்துவோம். இவ்வாறு அவர் கூறினார்.

சர்க்கரை ஆலை நிர்வாகத்தினரிடம் கேட்டபோது, "உற்பத்தி செலவை விட சர்க்கரை விலை மிகக் குறைவாக உள்ளது. ஆலையை நஷ்டத்தில் நடத்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

தமிழக அரசு அறிவித்த விலையைக் கொடுத்தால் ஆலையை மூடவேண்டிய நிலை வரும். கடந்த ஆண்டைவிட கூடுதலாக அறிவித்த விலையை விவசாயிகளுக்கு தமிழக அரசே வழங்கினால் மட்டும் சர்க்கரை ஆலைகளைக் காப்பாற்ற முடியும்' என்றனர்.

**பன்னீர் கரும்பு சாகுபடியில் விவசாயிகள்...ஆர்வம்! கூடுதல் விலை கிடைப்பதால் மகிழ்ச்சி**

விழுப்புரம்:பன்னீர் கரும்பு தேவை அதிகரித்து, கூடுதல் லாபம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். பல விவசாயிகள் ஆர்வமுடன் பன்னீர் கரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழர் பண்டிகையான பொங்கல் திருநாள் அன்று பச்சரிசி பொங்கல் வைத்து, மஞ்சள் கிழங்கு மற்றும் கரும்புகளை உடன் வைத்து, சூரியனுக்கு படைத்து மகிழ்வது இப்பண்டிகையின் சிறப்பாகும். துவக்கத்தில் இனிப்பிற்காக சாதா கரும்புகளை வைத்து வழிபடுவது வழக்கம். நாளடைவில்பன்னீர் கரும்பு வைத்து படையல் செய்வது வழக்கமாகி விட்டது. பன்னீர் கரும்பு கருநீல நிறத்தில், தடிமனாகவும், கடித்து சாப்பிடுவதற்கு எளிதாகவும் இருப்பதால், சிறுவர்கள், பெரியவர்கள் விரும்பி சாப்பிடும் நிலை உள்ளது.

பொங்கல் பண்டிகையின் கடைசி நாளான காணும் பொங்கல் அன்று கடற்கரை பகுதிகள் மற்றும் உள்ளூர் விழாவிலும் பன்னீர் கரும்பின் தேவை அதிகமாக உள்ளது. தேவை அதிகரிப்பு துவக்கத்தில் பொங்கல் பண்டிகையின் போது மட்டும் பன்னீர் கரும்பு பயன்படுத்தப்பட்டன. கடந்த சில ஆண்டுகளாக விநாயகர் சதுர்த்தி, ஆயுதபூஜை மற்றும் ஆற்றுத் திருவிழா போன்றவற்றிலும் பன்னீர் கரும்பின் தேவை அதிகரித்து வருகிறது. நகரங்களில் மட்டும் பயன்படுத்திய பன்னீர் கரும்பு, தற்போது கிராமங்களிலும் விழாக் காலங்களில் அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இதனால் விவசாயிகள் அதிகப் பரப்பளவில் பன்னீர் கரும்பு சாகுபடி செய்கின்றனர். பயிர் செய்யும் பன்னீர் கரும்புகளை, விவசாயிகளே வெட்டி எடுத்து வந்து நகரங்களில் விற்றனர். ஆனால் சில ஆண்டுகளாக, வியாபாரிகள் தோட்டங்களுக்கே சென்று, பணத்தை கொடுத்து, கரும்புகளை வெட்டி, லாரிகளில் ஏற்றி வந்து நகரங்களிலும், கிராமங்களிலும் விற்பனை செய்கின்றனர். கடந்த ஆயுத பூஜையின் போது ஒரு ஜோடி பன்னீர் கரும்பு 50 முதல் 60 ரூபாய் வரை விலை போனது. கட்டிங் பிரச்னை இல்லை

ஆலைகளுக்கு அனுப்பப்படும் சாதா ரக கரும்பு சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, அதிகாரிகள் கட்டிங் ஆர்டர் கொடுத்தால் மட்டுமே வெட்டி

அனுப்பும் நிலை உள்ளது. அவர்கள் நிர்ணயம் செய்யும் விலைக்கு மட்டுமே கரும்பை விற்க வேண்டும். மேலும் ஆலைக்கு அனுப்பிய கரும்பிற்கு உடனடியாக பணம் கிடைப்பதும் இல்லை.

ஆனால் பன்னீர் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்களின் கரும்பின் தரம் மற்றும் மக்களின் தேவைக்கு ஏற்ப, தாங்களே விலையை நிர்ணயம் செய்து விற்கின்றனர். கட்டிங் ஆர்டருக்கு காத்திருக்க வேண்டியதில்லை.

வெட்டுக் கூலி, வாகன வாடகை பிரச்னை விவசாயிகளுக்கு இல்லை. விற்பனை செய்யும் கரும்பிற்கு, உடனடியாக கை மேல் பணம் கிடைக்கிறது.

விவசாயிகள் ஆர்வம்

இருப்பினும் விழுப்புரம் மாவட்டத்திற்கு தேவையான அளவு கரும்பு கிடைக்காமல் போவதால், விழாக் காலங்களின் போது கடலூர், சேத்தியாத்தோப்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களிலிருந்து விழுப்புரம் மாவட்டத்திற்கு பன்னீர் கரும்புகளை எடுத்து வந்து விற்கின்றனர்.

இதனால் தற்போது விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பலரும் பன்னீர் கரும்பு சாகுபடியில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

**உளுந்து அதிக மகசூலால் விவசாயிகள்...உற்சாகம்! அதிகமான விலை கிடைக்க எதிர்பார்ப்பு**

தியாகதுருகம்:தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் 4 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மானாவரி உளுந்து மகசூல் அமோகமாக உள்ளதால் விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர். வீழ்ச்சி ஏற்படாமல் நல்ல விலை கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்கின்றனர்.

உளுந்துக்கு எப்போதும் நல்ல கிராக்கி உள்ளது. மானாவாரி பயிராக சாகுபடி செய்யப்படும் உளுந்து 90 நாட்களில் வளர்ந்து பலன் கொடுக்கிறது.

8 ஆயிரம் ஏக்கர்

தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி உளுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த அக்., மாதத்தில் விதைப்பு பணிகளை

முடித்து களை பறித்து ஊட்டச்சத்து உரங்களை தூவி, பூச்சு மருந்து தெளித்து பராமரித்தனர். கன மழை, வெயிலை தாக்குபிடித்து வளர்ந்து நல்ல பலனை உளுந்து கொடுக்கும் தன்மை கொண்டது. அவ்வப்போது பெய்த மழையால் செடிகள் நன்கு ஊட்டமாக வளர்ந்து அதிகளவில் பூத்தது.

வடகிழக்கு பருவமழை சீராக இருந்ததால் செடிகள் நன்கு செழித்து வளர்ந்தன. கனமழை, காற்று இல்லாததால் பூக்கள் உதிராமல் காய்களாக உருவாகின. இதனால் செடிகளில் அதிகளவில் காய்கள் காணப்படுகிறது. இவை தற்போது முற்றிலும் அறுவடைக்கு தயராக உள்ளது.

மழை ஏமாற்றம்

போதிய மழை பெய்யாமல் ஏமாற்றிய போதிலும் உளுந்து மகசூல் அதிகரித்துள்ளதால் சாகுபடி செய்த விவாயிகளுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உளுந்து மகசூல் இவ்வாண்டு அதிகம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் ஓரிரு நாட்களில் உளுந்து அறுவடையை துவக்க விவசாயிகள் தயராகி வருகின்றனர். இதே தருணத்தில் பருத்தி பஞ்சு சேகரிக்கும் பணிகளும் மும்முரமாக நடப்பதால் கூலியாட்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்படும் நிலை உள்ளது.

குறித்த நேரத்தில் உளுந்து அறுவடையை முடிக்காவிட்டால் காய் வெடித்து உளுந்து மணிகள் வீணாகி விடும் என்பதால் பொங்கல் பண்டிகைக்கு முன்பே அறுவடையை முடிக்க திட்டமிட்டுள்ளனர். விலை எதிர்பார்ப்பு

வழக்கமாக உளுந்து மகசூல் அதிகரிக்கும் தருணங்களில் விலை வீழ்ச்சியடைந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுவது வாடிக்கையாக உள்ளது. இதே நிலை தற்போதும் ஏற்படுமோ என்று விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கடந்த ஆண்டு கள்ளக்குறிச்சி மார்கெட் கமிட்டியில் உளுந்து விலை அதிகப் பட்சமாக 100 கிலோ மூட்டை 4,400 ரூபாய்க்கு விற்பனையானது.

தற்போதய நிலவரப்படி ஒரு மூட்டை 4,579 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கடந்த

ஆண்டை விட 179 ரூபாய் மட்டுமே விலை உயர்ந்துள்ளது விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. அதிகபட்சமாக 5,500 ரூபாய் வரை விலை கிடைக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். பருத்தி பஞ்சு, மஞ்சளை போன்று உளுந்து மணிகளை விலை உயரும் வரை பாதுகாக்க முடியாது.நம்பிக்கை பூச்சு பாதிப்பு இருக்கும் என்பதால் உடனடியாக விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளதால் நியாயமான விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். வழக்கமாக ஜூன் மாதத்தில் கம்பு சாகுபடி செய்து அறுவடை செய்ததும் உளுந்து பயிரிடுவது வழக்கம். தென்மேற்கு பருவமழை பொய்த்ததால் இப்பகுதியில் கம்பு சாகுபடி செய்வதை 80 சதவீத விவசாயிகள் தவிர்த்து விட்டனர்.
இந்நிலையில் நம்பிக்கையுடன் பயிரிட்ட உளுந்து நல்ல மகசூலை கொடுத்துள்ளதால் சாகுபடி செய்த விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர்.

பயிர் காப்பீடு கோரி தீர்மானம்

கடலாடி : கடலாடியில் ஒன்றிய பா.ஜ., கூட்டம், ஒன்றிய தலைவர் ராமசாமி தலைமையில் நடந்தது. மாநில செயற்குழு உறுப்பினர் சுடலை மாடன், மாநில பொதுக்குழு உறுப்பினர் வில்வலிங்கம், மாவட்ட பிரசார அணி செயலாளர் நாகூர்பாண்டியன் முன்னிலை வகித்தனர். லோக்சபா தேர்தலுக்கான பூத் கமிட்டி தலைவர் தேர்வு, "வீடு தோறும் தாமரை யாத்திரை' செல்வது, பயிர் காப்பீடு வழங்கவும், கடலாடியில் குடிநீர் தட்டுப்பாட்டை தீர்க்கவும், பஸ் ஸ்டாண்டில் இருக்கைகள் வசதியுடன் கட்டடம் கட்ட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட செயலாளர் புவனேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் உவகேந்திரன், ஆறுமுகம், ஒன்றிய இளைஞரணி பொது செயலாளர் பூமிநாதன் உள்பட பலர் பங்கேற்றனர். நகர் தலைவர் மும்மூர்த்தி நன்றி கூறினார்.

### விளைச்சலின்றி எடை குறையும் ஆடுகள்இருப்பிடத்தை மாற்றும் மேய்ப்பர்கள்

காரைக்குடி மழையின்றி,புல்வெளி நிலங்கள் மண் தரையாக காட்சியளிப்பதால்,ஆடுகள் வளர்ச்சி குறைந்து வருகிறது. கிடை போட்டு மேய்ப்பவர்கள் இருப்பிடத்தை மாற்றும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.
கடந்த இரண்டு ஆண்டுகளாக, பருவமழை ஏமாற்றி வருகிறது. இருக்கின்ற குளம், குட்டைகளின் வரத்துக்கால்வாய் ஆக்கிரமிப்பால், நூறுநாள் திட்ட பணியாளர்கள் மூலம், தோண்டிய குழிகளில் கூட தண்ணீர் நிரம்பவில்லை. கால்நடைகளுக்கு வைக்கோல் கிடைப்பதில்,தட்டுப்பாடு நிலவுகிறது.
ஊர்தோறும் கிடைபோட்டு ஆடு மேய்ப்பவர்களின் பாடு திண்டாட்டமாகி வருகிறது. ஒரு இடத்தில், கிடை போட்டால், மூன்று முதல் 5 மாதம் வரை தங்குபவர்கள், தற்போது ஆடுகளுடன், மாதம் ஒரு முறை கிடையை மாற்றி வருகின்றனர். மேலும், பருவம் வந்த செம்மறி கிடாக்கள், 20 முதல் 25 கிலோ வரை எடை இருக்கும். மேய்ச்சல் புல் இல்லாததால், அதிகபட்சம் 15 கிலோ எடை மட்டுமே உள்ளது. அவர்கள் பெரும் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

### ஏமாற்றியது பருவ மழை; வேதனையில் விவசாயிகள்

திருப்பூர் : திருப்பூர் மாவட்டத்தில், சராசரி அளவை விட, கடந்தாண்டு மிக குறைவாகவே மழை பெய்துள்ளது.திருப்பூர் மாவட்டத்தின், ஆண்டு சராசரி மழையளவு 602.45 மி.மீ., கடந்த 2012ல் 365.29 மி.மீ., மட்டுமே மழை பதிவானது. போதிய மழை பெய்யாததால் வறட்சி ஏற்பட்டது. நிலத்தடி நீர் மட்டம் அதல பாதாளத்துக்கு சென்றது. பாசன திட்டங்கள், இறவை பாசனத்தின் கீழ் பயன் பெறும் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்காமல், பயிர் சாகுபடி முற்றிலும் பாதித்தது; தென்னை மரங்கள் காய்ந்தன. மாநிலத்தில் மிகவும் குறைவான மழை பெய்த மாவட்டமாகவும், வறட்சி மாவட்டமாகவும், திருப்பூர் அறிவிக்கப்பட்டது. கடந்த 2012ம் ஆண்டை காட்டிலும், 2013ம் ஆண்டில் அதை விட மோசமாக மழை பெய்துள்ளது. ஜன., - பிப்., மாத குளிர் கால மழை, ஆண்டுதோறும் சராசரியாக 9.02 மி.மீ., பெய்யும். ஆனால், ஆண்டு துவக்கத்தில் மழை பொழிவு அதிகரித்து,

முதல் இரண்டு மாதங்களில் 45.53 மி.மீ., பெய்தது. ஆனால், அடுத்து வந்த மாதங்கள் சோதனை காலங்களாக மாறின. மார்ச் முதல் மே வரையிலான கோடைகால மழையளவு சராசரி 124.20 மி.மீ., ஆனால், வெறும் 39.47 மி.மீ., மட்டுமே பெய்து, வறட்சியை மீண்டும் துவக்கியது.

ஜூன் முதல் செப்.,வரையிலான, தென்மேற்கு பருவ மழையாவது கை கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. பருவ காலத்தின் துவக்கம், கன மழை பெய்யத் துவங்கியது. ஆனால், தொடர்ந்த மழை பெய்யவில்லை. தென்மேற்கு பருவ மழை சராசரி அளவான 125.21 மி.மீட்டரில், வெறும் 49.65 மி.மீ., மட்டுமே பெய்தது.

வடகிழக்கு பருவ மழையாவது இந்தாண்டு பெய்து, கோடை காலத்தை சமாளிக்க உதவும் என்ற எதிர்பார்ப்பு உருவானது; ஆனால், வட கிழக்கு பருவ மழையும் ஏமாற்றியது. அக்., முதல் டிச., வரை பெய்யும், வடகிழக்கு பருவ மழை சராசரியளவு 344.02 மி.மீ., கடந்தாண்டு, 170.37 மி.மீ., மட்டுமே பெய்தது. ஆண்டு முழு வதும், மொத்தம் 315.02 மி.மீ., மழை மட்டுமே பெய்தது. இது, மாவட்டத்தின் 10 ஆண்டு சராசரி மழையளவான 602.45 மி.மீ., விட, 287.43 மி.மீ., குறைவு. தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக மழை ஏமாற்றியுள்ளதால், விவசாயம் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளது; நிலத்தடி நீர் மட்டமும் கீழிறங்கியுள்ளது. இதனால், வரும் கோடையில் பாதிப்புகள் அதிகரிக்கும் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கசக்கும் கரும்பு! கண்ணீர் வடிக்கும் விவசாயிகள்...




மதுரை: தித்திக்கும் இனிப்பு சுவையூட்டும் சர்க்கரை, வெல்லம் இல்லாமல் அன்றாட வாழ்வு இல்லை. கரும்பில் இருந்துதான் சர்க்கரை, வெல்லம் உற்பத்தியாகிறது. இனிக்க வைக்கும் கரும்பு, உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கசந்து, கலங்குவது ஏன்? ஒரு சிறப்பு பார்வை: தமிழகத்தில் 43 கரும்பு ஆலைகள் உள்ளன. இதில் 16 கூட்டுறவு ஆலைகளாகும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் கரும்பை ஆலைகளுக்கு அளிக்கிறார்கள். இந்த ஆலைகள் விவசாயிகளிடம் வாங்கும் கரும்பு கொள்முதல் விலையை மத்திய, மாநில அரசுகள் ஆண்டுதோறும் நிர்ணயம் செய்கின்றன.

கடந்த ஆண்டு மத்திய அரசின் விலை டன் ரூ.1,700 என்றிருந்த விலையில் தற்போது கூடுதலாக ரூ.400 சேர்த்து ரூ.2,100 ஆக்கியது. தமிழக அரசு கடந்த ஆண்டு ரூ.650 வழங்கி வந்த தொகையை இந்த ஆண்டு டன்னுக்கு ரூ.100 குறைத்து ரூ.550 என நிர்ணயித்து அறிவித்துள்ளது. இதனால் டன்னுக்கு ரூ.2,650 மட்டுமே கிடைக்கிறது. இது கரும்பு உற்பத்தி விவசாயிகள் தலையில் இடி விழுந்தது போல் அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. ஏனென்றால் பொட்டாஷ், டிஏபி உரம் விலை கடந்த ஆண்டை விட தற்போது இரு மடங்கிற்கு மேல் எகிறியது. யூரியா, டீசல் விலை உள்ளிட்ட கரும்பு உற்பத்தி செலவு அனைத்தும் தாறுமாறாக ஏறி விட்டன. ஏற்கனவே கடந்த ஆண்டு அரவைக்கு அனுப்பிய கரும்புக்கு

இன்னும் ஆலைகள் முழுமையாக பணம் பட்டுவாடா செய்யவில்லை. தமிழகம் முழுவதும் ரூ.500 கோடிக்கு மேல் பாக்கி உள்ளது. இதனால் கரும்பு விவசாயம் கரைந்து கொண்டே வருகிறது.

இந்த சூழ்நிலையில் தற்போது அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு கரும்பு உற்பத்தி செய்வது கட்டுபடியாகாது என விவசாயிகள் வாதிடுகின்றனர். டன்னுக்கு ரூ.3,500 வீதம் விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும், வயலில் இருந்து எடுத்து செல்லும் செலவை ஆலையே ஏற்றுக் கொள்ளவேண்டும் என மன்றாடுகிறார்கள். பல்வேறு பகுதிகளில் வெட்டிக் கிடக்கும் கரும்புகளை ஆலைகள் ஏற்றிச் செல்லாமல் வயல்காட்டில் தேங்கி காய்கிறது. 'இந்தியாவிலேயே, தமிழ் நாட்டில்தான் கரும்பு கொள்முதல் விலை குறைவு, இதே நிலை நீடித்தால் கரும்பு உற்பத்தி காலியாகி, ஆலைகளை இழுத்து மூடும் அபாயம் ஏற்படும்' என விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். பொங்கல் பண்டிகை நெருங்கும் நிலையில் விவசாயிகளுக்கு கரும்பு உற்பத்தி கசந்து கண்ணீர் பொங்குகின்றனர். கண்ணீர் வற்றும் முன் அரசு கை கொடுக்குமா என ஏங்குகின்றனர்.தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் பழனிச்சாமி: தமிழகத்தில் 43 சர்க்கரை ஆலைகளில் 27 தனியாருக்கு சொந்தமானது. அவர்கள் ஆதாயம் அடையும் நோக்குடன் கரும்பு கொள்முதல் விலையை தமிழக அரசு நிர்ணயித்துள்ளதாக கருதுகிறோம். உரம் உள்ளிட்ட உற்பத்தி செலவு அனைத்தும் உயர்ந்துள்ள நிலையில் கடந்த ஆண்டை விட டன்னுக்கு ரூ.100 குறைத்து விவசாயிகள் தலையில் கை வைக்கப்பட்டு இருப்பது வேதனைக்குரியது. உத்தரபிரதேச மாநிலத்தில் டன் ரூ.3,200, பஞ்சாபில் ரூ.3,020, அரியானாவில் ரூ.3,100 என அந்த மாநில அரசுகள் நிர்ணயித்துள்ளன. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் குறைந்த விலையாக உள்ளது. இதை எதிர்த்து பொங்கல் பண்டிகைக்கு முன், ஜனவரி 7ல் போராட்டம் நடத்த தயாராகி உள்ளோம். விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன்: கரும்பில் இருந்து சீனி மட்டும் உற்பத்தியாகவில்லை. மொலாசஸ், எரி சாராயம், மின்சாரம், இயற்கை

உரம் தயாரிக்கப்படுகிறது. எனவே ஒரு டன் கரும்பில் ஆலைக்கு ரூ.8 ஆயிரம் கிடைக்க வாய்ப்புள்ளது. இதில் கரும்புக்கு ரூ.3,500 முதல் ரூ.4 ஆயிரம் கொடுக்கலாம். கரும்பிலிருந்து கிடைக்கும் மூலப்பொருளை கொண்டு தயாரிக்கும் பிராந்தி மதுவுக்கு விலை ஏறிக் கொண்டே போகிறது. ஆனால் கரும்புக்கு விலையை குறைப்பது அநியாயம். இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு தலைவர் புத்திசிகாமணி: கரும்பு டன்னுக்கு ரீ3,500, நெல் குவிண்டால் ரூ.2,000 ஆயிரம் நிர்ணயிக்க வேண்டும். மதுவுக்கு விலையை உயர்த்தும்போது, விவசாயி உற்பத்தி செய்யும் கரும்புக்கு விலை குறைப்பது வேதனையானது. இதை எதிர்த்து பொங்கல் பண்டிகைக்கு பிறகு கோட்டை முன் போராட்டத்துக்கு தயாராகி உள்ளோம்.

### ரூ.12க்கு தயாரித்து ரூ.380க்கு விற்பனை

ஆலை நிர்வாகம் தரப்பில் கேட்டபோது, ‘‘கரும்பில் இருந்து சர்க்கரை உற்பத்தி செய்து அரசுக்கு அளிப்பதில் மூட்டைக்கு ரூ.400 இழப்பு ஏற்படுகிறது, இதனால் ஆலைகள் நலிவடைகின்றன. எனவே கரும்பு விலையை உயர்த்தினால் கட்டுபடியாகாது,‘‘ என்கின்றனர். விவசாயிகள் சங்க கூட்டமைப்பு செயலாளர் நல்லுசாமி கூறும்போது, ‘‘கரும்பிலுள்ள சர்க்கரை சத்தின் அடிப்படையில் கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால் கரும்பு சக்கையில் இருந்து மின்சாரம், மது தயாரிக்கப்படுகிறது. இதன் விலையை விவசாயிகளுக்கு கொடுப்பது இல்லை. மது பாட்டில் தயாரிப்பு செலவு ரூ.12. ஆனால் கடைகளில் ரூ.380க்கு விற்கப்படுகிறது,‘‘ என்றார்.

### உயராத சர்க்கரை விலை

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் ஏறியுள்ள நிலையில் சர்க்கரை சீனி விலை மட்டும் வெளி மார்க்கெட்டில் ஏறவில்லை. 2011ல் கிலோ ரூ.30க்கு விற்றது. 2012ல் ரூ.36, தற்போது ரூ.34 ஆக உள்ளது.

**மீனவர்கள் பிரச்னை தீர மன்னார் வளைகுடாவில் மாற்றுத்திட்டம்**



ராமேஸ்வரம்: இலங்கை கடற்படையில் அச்சுறுத்தல்களுக்கு நிரந்தரத் தீர்வாக, மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மணல் திட்டுகளையும், ஒன்று மற்றும் இரண்டாம் திட்டுகளிடையே உள்ள கால்வாயையும் ஆழப்படுத்தி, மாற்றுத்திட்டத்தை செயல்படுத்தவேண்டும் என மீனவர்கள் வலியுறுத்துகின்றனர். ராமேஸ்வரம் முதல் கோடியக்கரை வரையுள்ள கடலோர பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் தாக்குதல் மற்றும் கைது நடவடிக்கைக்கு உள்ளாவது அதிகரித்து வருகிறது. தமிழகத்திற்கும், இலங்கைக்கும் இடையேயுள்ள பாக் ஜலசந்தி கடல் பகுதியில்தான் தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடித்து வருகின்றனர்.

கச்சத்தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்ட பின்னர், 37 ஆண்டுகளுக்கு முன் பாதுகாப்பு காரணங்களுக்காக இரு நாடுகளுக்கும் இடையே கடல் எல்லை வரையறுக்கப்பட்டது. இதையடுத்து தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதாக கூறி துப்பாக்கி சூடு, படகுகளை உடைத்து சேதப்படுத்துவது. மீன்பிடி சாதனங்களை சேதப்படுத்துவது, மீன்களை பறித்து செல்வது உள்ளிட்ட அத்துமீறல்களில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். மீனவர்களையும் சிறை பிடித்து செல்கின்றனர். இந்த ஆண்டில் மட்டும் தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த 582 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இதில் இன்று வரை 256 மீனவர்கள் விடுவிக்கப்படாமல்

இலங்கை சிறைகளில் உள்ளனர். 102 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இன்னும் 81 படகுகள் விடுவிக்கப்படாமல் உள்ளன. இந்த பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு கோரி பல்வேறு போரட்டங்களை மீனவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன் பிடிக்க வழி செய்யும் வகையில் மாற்று திட்டங்களை கண்டறிந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழக மீனவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். தனுஷ்கோடி கடல் பகுதியில் உள்ள மணல் திட்டுகளை ஆழப்படுத்த வேண்டும் என்று ராமேஸ்வரம் மீனவர்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்தியா, இலங்கை இடையே பாக் ஜலசந்தி கடலில் ஏராளமான மணல் திட்டுகள் உள்ளன. இத்திட்டுகளிடையே ஆழம் குறைந்த கால்வாய்கள் இயற்கையாக அமைந்துள்ளன. தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையிலிருந்து ஒன்றாவது மற்றும் 2வது மணல் திட்டுக்கு இடையே உள்ள கால்வாயை சிறிது ஆழப்படுத்தினால் ராமேஸ்வரம், தொண்டி கடலோரப்பகுதி மீனவர்கள் இவ்வழியாக தங்களது படகுகளை மன்னார் வளைகுடா கடலுக்கு சென்று மீன்பிடித்து திரும்பலாம். மன்னார் வளைகுடா கடலை தாண்டினால் சர்வதேச கடல் எல்லைதான் வரும். இதனால் மீனவர்களுக்கும் ஆபத்து இல்லை.

கடந்த 2001ல் அப்போதைய ராமேஸ்வரம் கடற்படை ஏரியா கமாண்டர் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் இதுபோன்ற ஒரு திட்டத்திற்கு ஆய்வு நடத்தி, முதல் 2 மணல் திட்டுகளுக்கு உடையே உள்ள கடல் பகுதியை ஆழப்படுத்த ஒப்புதல் வழங்கினர். தமிழக அரசும் இத்திட்டத்தை பரிசீலனை செய்தது. பின்னர் இந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது. இப்பகுதியை ஆழப்படுத்தினால் இந்திய கடற்படைக்கு சொந்தமான ரோந்து படகுகளும், மீன்பிடி படகுகளும் எவ்வித பிரச்னையும் இல்லாமல் மன்னார் வளைகுடா கடலுக்கு சென்று திரும்பலாம் என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## இதில் என்ன சிக்கல்?

மன்னார் வளைகுடா கடல் பகுதிக்கு செல்ல ஓலைக்குடா, தங்கச்சிமடம் வழியாக பாம்பன் பாலத்திற்கு வர வேண்டும். அங்கிருந்து 20 கிமீ தூரம் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பயணம் செய்தால், மீன்கள் அதிகம் உள்ள பகுதிக்கு செல்ல முடியும். இதனால் டீசல் செலவு அதிகரிக்கும். ஆனால் ராமேஸ்வரம், மண்டபம், தொண்டி மீனவர்கள் 3 மணிநேர பயணம் செய்தால் பாக் ஜலசந்தியில் கடல் எல்லையை தாண்டி, மீன்கள் அதிகம் உள்ள பகுதிக்கு சென்று விடலாம்.

## எக்ஸ்ட்ரா தகவல்

பாக் ஜலசந்தி கடல் பகுதிகள் ஆழம் குறைந்தவை. கச்சத்தீவை ஒட்டிய கடல் பகுதிகள் மீன்வளம் செறிந்தவை.

**வரத்து குறைந்ததால் பூண்டு விலை அதிகரிப்பு**



சேலம்: வடமாநிலங்களில் பூண்டு விளைச்சல் குறைந்து, தமிழகத்திற்கு வரத்து குறைந்ததால் விலை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ பூண்டு ரூ.100க்கு விற்பனை செய்யப்படுகிறது. மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் பூண்டு சாகுபடி அதிகம். நாட்டின் பல பகுதிகளுக்கு இங்கிருந்து தான் விற்பனைக்கு செல்கிறது. கடந்தாண்டு மார்ச், ஏப்ரல், மே மாதத்தில் வடமாநிலங்களில் பூண்டு விளைச்சல் குறைந்தது. இதனால் கிலோ ரூ.80க்கு

விற்பனை செய்யப்பட்டது. பின்னர் செப்டம்பர், அக்டோபரில் பூண்டு வரத்து அதிகரித்தால், விலை குறைந்தது ஒரு கிலோ ரூ.50 என விற்பனை செய்யப்பட்டது. தற்போது மீண்டும் வரத்து குறைந்து விலை அதிகரித்து வருகிறது. சேலம் செவ்வாய்பேட்டை பூண்டு வியாபாரிகள் கூறியதாவது: கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ பூண்டு ரூ.50 என விற்பனை செய்யப்பட்டது. தற்போது வடமாநிலங்களில் இருந்து பூண்டு வரத்து குறைந்துள்ளது. இதனால் ஒரு கிலோ பூண்டு ரூ.100 எனவும், நீலகிரி பூண்டு ரூ.140 எனவும், உதிரி பூண்டுகள் ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு பூண்டு வியாபாரிகள் கூறினர்.

**முட்டை விலை நிர்ணயத்தில் இன்று முதல் புதிய நடைமுறை அமல்**



நாமக்கல்: முட்டை விற்பனையில் புதிய நடைமுறை இன்று முதல் அமலுக்கு வருகிறது. இதனால், நுகர்வோருக்கு நியாயமான விலையில் முட்டை கிடைக்கும் என்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவினர் தெரிவித்துள்ளனர். நாமக்கல் முட்டைக்கு கொள்முதல் விலை நிர்ணயம் செய்வதில் கடந்த ஒரு ஆண்டாக பிரச்னைகள் ஏற்பட்டன. முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயம் செய்யும் விலையை காட்டிலும் பண்ணைகளில் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டன. அதேசமயத்தில் நுகர்வோருக்கு பல மடங்கு விலை அதிகரித்து விற்பனை செய்யப்படுகிறது.

இந்த பிரச்னையை முடிவுக்கு கொண்டு வர இன்று (ஜனவரி 1ம் தேதி) முதல் முட்டை உற்பத்தியாளர் ஒருங்கிணைப்பு குழு (என்.இ.சி.சி) நிர்ணயம் செய்யும்

விலைக்கே பண்ணைகளில் வியாபாரிகள் முட்டை வாங்க வேண்டும். அந்த விலைக்கு குறைவாக பண்ணையாளர்கள் விற்பனை செய்யக்கூடாது என என்இ.சி.சி நிபந்தனை விதித்துள்ளது. இதன் மூலம் என்இசிசி நிர்ணயம் செய்யும் விலையில் இருந்து அதிகபட்சம் 50 காசுகள் மட்டுமே சில்லறை விலையில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் முட்டை விற்பனை அதிகரிக்கும் என பண்ணையாளர்கள் எதிர்பார்க்கின்றனர். நுகர்வோருக்கும் நியாய விலையில் முட்டை விற்பனை செய்யப்படும். நாமக்கல் மண்டலத்தில் நேற்று நிர்ணயிக்கப்பட்ட பண்ணை கொள்முதல் விலை 360 காசு. மண்டல வாரியாக விலை: சென்னை-390காசு, பெங்களூரு-390காசு, மைசூர்-380 காசு, ஐதராபாத்-376காசு, மும்பை-414காசு, விஜயவாடா-385காசு, கொல்கத்தா-413காசு, பர்வாலா -390காசு, டெல்லி-408காசு.

எந்த ஊரில் என்ன விலை?: என்.இ.சி.சி விலையில் இருந்து, வியாபாரிகள் தமிழகத்தில் உள்ள முக்கிய நகரங்களில் உள்ள மொத்த முட்டை வியாபாரிகளுக்கு கொடுக்க வேண்டிய விலை விவரத்தை என்இ.சி.சி அறிவித்துள்ளது. அதன் விவரம்: சேலம் என்இசிசி விலையில் இருந்து 7 காசு அதிகரிக்கப்பட்டுள்ளது. நாமக்கல்லில் பண்ணை கொள்முதல் விலை நேற்று 360 காசு. இங்கிருந்து முட்டை வாங்கி செல்லும் வியாபாரி சேலத்தில் உள்ள மொத்த வியாபாரிக்கு 367 காசுக்கு விற்பனை செய்ய வேண்டும். சில்லறை விற்பனைக்கு வரும்போது பண்ணை கொள்முதலில் இருந்து அதிகபட்சமாக 15 பைசா முதல் 20 பைசா வரை மட்டுமே அதிகரித்து நுகர்வோருக்கு விற்பனை செய்ய வேண்டும்.

மற்ற ஊர்களில் பண்ணை விலையை காட்டிலும் நுகர்வோர் வாங்கும் போது 50 பைசா வரை தான் கூடுதலாக வழங்கவேண்டியிருக்கும். இதை காட்டிலும் கூடுதலாக கட்டணம் வாங்கினால் இடைத்தரர்கள் தலையீடு தான் காரணமாக இருக்க முடியும் என்பதை அறிய முடியும் என்கின்றனர் பண்ணையாளர்கள்.

**மேலூர் பகுதியில் கருகும் பயிர்கள் முல்லை பெரியாறில் இருந்து தண்ணீர் திறக்கப்படுமா? அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு**

மதுரை, : மேலூர் பகுதியில் பெரியாறு, வைகை ஒரு போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்க உத்தரவிடக் கோரிய மனுவுக்கு பதிலளிக்க அரசுக்கு ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

மதுரை மாவட்டம், மேலூர் சென்னகரம்பட்டியை சேர்ந்த திருமேனி, ஐகோர்ட் கிளையில் வக்கீல்கள் கருணாநிதி மூலம் தாக்கல் செய்த மனு:

மேலூர் பகுதியில் பெரியாறு, வைகை ஒரு போக பாசனத்திற்கு செப்.25ல் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், நூறு ஏக்கர் பரப்பளவில் ஒரு போக சாகுபடிக்கான பணிகள் துவக்கப்பட்டன. தற்போது பயிர்கள் விளைந்து அறுவடைக்கு தயாராகி வரும் நிலையில் தண்ணீர் திடீரென நிறுத்தப்பட்டுள்ளது. இன்னும் 3 அல்லது 4 முறை தண்ணீர் திறந்தால் பயிர்களை காப்பாற்றிவிடலாம்.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் விவசாயம் நடைபெறவில்லை. இதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். மேலூர் பகுதியில் ஒரு போக சாகுபடி பயிர்களை காப்பாற்ற தினமும் 150 மில்லியன் கன அடி வீதம் 15 நாட்களுக்கு 2,250 மில்லியன் கன அடி தண்ணீர் தேவைப்படுகிறது.

தற்போது வைகையில் 1,100 மில்லியன் கன அடியும், பெரியாறில் 2,250 மில்லியன் கன அடி தண்ணீரும் உள்ளது. இருப்பினும், தண்ணீர் குறைவாக இருப்பதாக கூறி மேலூர் பகுதிக்கு தண்ணீர் திறக்க அதிகாரிகள் மறுத்து வருகின்றனர். தண்ணீர் பற்றாக்குறை நேரங்களில் வைகை அணையில் கடன் வாங்கி, அந்த தண்ணீரை பெரியாறு பாசன பகுதிக்கு வழங்கியது முன்பு நடந்துள்ளது. இப்போது தண்ணீர் திறக்காவிட்டால், பயிர்கள் கருகும் நிலை ஏற்படும். பெரியாறு அணை 3 அடி ஆழப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பெரியாறு அணையில் இருந்து 3 அடிக்கு தண்ணீர் எடுக்க முடியும். எனவே, மேலூர் பகுதியில் பெரியாறு, வைகை ஒரு போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

மனு நீதிபதிகள் பிரகாஷ், மகாதேவன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.  மனுவை விசாரித்த நீதிபதிகள், இது விவசாயிகளின் வாழ்வாதார பிரச்னை. இதில் காலம் கடத்தக்கூடாது. பிரச்னையின் தீவிரம் கருதி மனுவுக்கு அரசு ஜன. 2க்குள் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டனர். அடுத்த விசாரணை ஜன. 2க்கு ஒத்திவைக்கப்பட்டது.

**மூணாறில் கடும் பனிப்பொழிவு பயணிகள் உற்சாகம்**

மூணாறு, : மூணாறில் தற்போது கடும் பனிப்பொழி வாக உள்ளதால் சுற்றுலா பயணிகள் உற்சாகமடைந்துள்ளனர்.

கிறிஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு கேரள மாநிலம், மூணாறுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள் ளது. கடந்த சில நாட்களாக இங்கு பனிப் பொழிவு அதி கமாக காணப்படுகிறது. காலை 8 மணி வரை மக்கள் வெளியே வராமல் வீடுக ளில் முடங்கி கிடக்கின்றனர். இதனால் தெருக்கள், கடை வீதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. இத னால் சுற்றுலா பயணிகள் உற்சாகமாக உலா வருகின்றனர். வெப்ப நிலை மைனஸ் இரண்டு டிகிரியாக இருந்தது. நகரின் பல இடங்களில் பொதுமக்கள் தீ மூட்டி குளிர் காய்ந்தனர். கடும பபனிப்பொழிவால, இப்பகுதியில் உள்ள தேயலை செடிகள கருகும் அபாயம ஏற்படடுளளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாய ஆராய்ச்சி மையத்திற்கு வந்த எறும்பு தின்னி வனப்பகுதியில் விடப்பட்டது**



பவானிசாகர்,

பவானிசாகரில் உள்ள விவசாய ஆராய்ச்சி மையத்திற்குள் நேற்று மாலை எறும்பு தின்னி ஒன்று வனப்பகுதியில் இருந்து தப்பி வந்தது. இதை பார்த்த அதிகாரிகள் பவானிசாகர் வனத்துறைக்கு தகவல் கொடுத்தனர். பவானிசாகர் ரேஞ்சர் சிவசுப்பிரமணியம் தலைமையில் வனவர்கள் ராஜமாணிக்கம், குப்புசாமி, அமுல்ராஜ் உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு சென்று எறும்பு தின்னியை பத்திரமாக மீட்டு பவானிசாகர் வனப்பகுதியில் விட்டனர்.

**ரூ.12 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை**

அம்மாபேட்டை, பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.12 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது.

விளைபொருட்கள் ஏலம் அம்மாபேட்டை அருகில் உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடைபெற்ற விவசாய விளைபொருட்கள் ஏலத்துக்கு விவசாயிகள் 2 ஆயிரத்து 181 தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர். இதில்

சிறிய தேங்காய் ஒன்று 4 ரூபாய் 10 காசுக்கும், பெரிய தேங்காய் ஒன்று 12 ரூபாய் 60 காசுக்கும் என மொத்தம் ரூ.14 ஆயிரத்து 100-க்கு விற்பனையானது.

கொப்பரை தேங்காய் 70 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 6 ஆயிரத்து 190 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 7 ஆயிரத்து 70 ரூபாய்க்கும் என மொத்தம் 84 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனையானது.

மக்காச்சோளம் வெள்ளை எள் 7 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 9 ஆயிரம் ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 12 ஆயிரத்து 600 ரூபாய்க்கும் என மொத்தம் 72 ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்பனையானது. மக்காச்சோளம் 239 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்த பட்ச விலையாக 900 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,170 ரூபாய்க்கும் என மொத்தம் 2 லட்சத்து 29 ஆயிரத்து 900 ரூபாய்க்கு விற்பனையானது.

நெல் 181 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இதில் பொன்னிரக நெல் குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 1,380 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,700 ரூபாய்க்கும், ஏ.டி.டி.-39 ரக நெல் குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 900 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,100 ரூபாய்க்கும் என மொத்தம் ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனையானது.

ரூ.12 லட்சத்துக்கு விற்பனை நிலக்கடலை காய்ந்தது 563 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 3 ஆயிரத்து 300 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 100 ரூபாய்க்கும் என மொத்தம் 6 லட்சத்து 24 ஆயிரத்து 100 ரூபாய்க்கு விற்பனையானது. அனைத்து விவசாய விளைபொருட்களும் 11 லட்சத்து 85 ஆயிரத்து 300 ரூபாய்க்கு விற்பனையானது.

**நோயால் நெற்பயிர்கள் பாதிப்பு: விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்ககோரி ஆர்ப்பாட்டம் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்றது**

திருவாரூர்,

நோயால் நெற்பயிர் களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் விவசாயி களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என் பதை வலியுறுத்தி நேற்று திராவிடர் கழகத்தினர் திருவாரூரில் ஆர்ப் பாட்டம் செய்தனர்.

பயிர்கள் பாதிப்பு

திருவாரூர் ஒன்றியத்திற்கு உட் பட்ட நடப்பூர், செருகுடி, வைப்பூர், கீழசூர னூர், மேல சூரனூர், திருவாதி ரைமங்கலம், பழையவலம், ஓடாச்சேரி, ஆமூர், வடகுடி, சோழங் கநல்லூர், நெடு கட்டான்குடி, எழுமுக்கால், ராஜாங்கட்டளை, பிராங்குடி, தென்னாசல்லூர், தேராகுளம், சவுரி ராஜன்கட்டளை உள்ளிட்ட கிராமங் களில் நெற்பயிர்கள் சூரை மற்றும் மஞ்சள் நோயால் பாதிக்கப்பட் டுள்ளதால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும், என்பது போன்ற கோரிக்கை களை வலியுறுத்தி திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவல கம் முன்பு திராவிடர் கழகம் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப் பாட்டத்திற்கு திரா விடர் கழக செயலவை தலை வர் அறிவுக்கரசு தலைமை தாங்கினார். மாநில விவசாய தொழிலாளர் அணி செயலா ளர் கணபதி, தி.மு.க. மாவட்ட செயலாளர் பூண்டி கலை வாணன், பொதுச்செயலாளர் செயக்குமார், மண்டல தலை வர் கோபால், மண்டல செய லாளர் முருகையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப் பாட்டத்தில் பொது செய லாளர் குணசேகரன், மாவட்ட தலைவர் மோகன், மாவட்ட செயலாளர் சுரேஷ், நாகை மாவட்ட தலைவர் ஜெகதீசன், மாவட்ட செயலாளர் தளபதி ராஜ் உள்பட திராவிடர் கழக நிர்வாகிகள், பொறுப்பாளர் கள் கலந்து கொண்டனர்.

கோரிக்கைகள்

இதில் கூட்டுறவு வங்கி, அனைத்து வங்கிகளிலும் விவ சாயிகள் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும், கடந்த ஆண்டு பயிர் காப்பீடு நிலுவை தொகையை உடனே வழங்க வேண்டும், கோமாரி நோயால் இறந்த கால்நடை களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி கோஷங்கள் எழுப் பப்பட்டன. மாவட்ட விவ சாய அணி செயலாளர் கணே சன் வரவேற்றார். முடிவில் நகர தலைவர் மனோகரன் நன்றி கூறினார்.

## உரம், எரிவாயு துறைகளின் பின்னடைவால் முக்கிய 8 துறைகளின் உற்பத்தி 1.7 சதவீதம் மட்டுமே அதிகரிப்பு

புதுடெல்லி

உரம், இயற்கை எரிவாயு ஆகிய துறைகளின் மந்தநிலையால் நவம்பர் மாதத்தில் முக்கிய எட்டு துறைகளின் உற்பத்தி 1.7 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது. 2012–ஆம் ஆண்டின் இதே மாதத்தில் இந்த உற்பத்தி 5.8 சதவீதம் உயர்ந்து இருந்தது. ஆக, நவம்பர் மாதத்தில் முக்கிய எட்டு துறைகளின் உற்பத்தி வளர்ச்சி குறைந்துள்ளது.

அக்டோபர் மாதத்தில்...

எனினும், முந்தைய அக்டோபர் மாதத்துடன் ஒப்பிடும்போது தற்போதைய வளர்ச்சி திருப்திகரமாக உள்ளது என சில நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஏனென்றால் அக்டோபர் மாதத்தில் முக்கிய எட்டு துறைகளின் உற்பத்தி 0.6 சதவீதம் சரிவடைந்து இருந்தது.

தொழில்துறை உற்பத்தியை கணக்கிடுவதில் கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, பெட்ரோலிய பொருள்கள், நிலக்கரி, மின்சாரம், சிமெண்டு, உரம், உருக்கு ஆகிய எட்டு துறைகளின் பங்கு 38 சதவீதமாக உள்ளது. எனவே, நவம்பர் மாதத்தில் தொழில்துறை உற்பத்தியில் வளர்ச்சி ஏற்பட்டு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை மத்திய அரசு

இனிமேல்தான் வெளியிடும். அக்டோபர் மாதத்தில் தொழில்துறை உற்பத்தி 1.8 சதவீதம் வீழ்ச்சி அடைந்தது.

<u>இயற்கை எரிவாயு</u>

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மாதத்தில் இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலிய பொருள்கள் உற்பத்தி முறையே 11.3 சதவீதம் மற்றும் 5 சதவீதம் குறைந்துள்ளது. 2012 நவம்பர் மாதத்தில் உரம் உற்பத்தி 5 சதவீதம் உயர்ந்து இருந்தது. இது, 2013 நவம்பர் மாதத்தில் 0.6 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது. ஆக, இதிலும் மந்தநிலை ஏற்பட்டுள்ளது.

கடனிற்கான வட்டி விகிதம் அதிகரிப்பு, எரிபொருள் விலை உயர்வு போன்ற காரணங்களால் உள்நாட்டில் கார் விற்பனை சரிவடைந்து வந்துள்ளது. மோட்டார் வாகனங்கள் தயாரிப்பதற்கு உருக்கு தகடுகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், கட்டுமானத் துறையிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனை வெளிப்படுத்துகின்ற வகையில் நவம்பர் மாதத்தில் உருக்கு பொருள்கள் உற்பத்தி வளர்ச்சி 7.8 சதவீதத்திலிருந்து 3.9 சதவீதமாக குறைந்துள்ளது.

நாட்டின் மின் உற்பத்தியில் அனல் மின் நிலையங்களின் பங்கு 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. அனல் மின் உற்பத்தியில் நிலக்கரி முக்கிய எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது. 2012 நவம்பர் மாதத்தில் நிலக்கரி உற்பத்தி 2.9 சதவீதம் குறைந்து இருந்தது. அதேசமயம், 2013 நவம்பர் மாதத்தில் உற்பத்தி 2.3 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது.

<u>சிமெண்டு</u>

நிலக்கரி போதுமான அளவிற்கு கிடைத்ததையடுத்து மின் உற்பத்தி 5.9 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. இது, 2012 நவம்பர் மாத வளர்ச்சியை (2.4 சதவீதம்) காட்டிலும் இரண்டு மடங்கிற்கு மேல் அதிகமாகும். கணக்கீடு செய்வதற்கு

எடுத்துக்கொள்ளப்பட்ட மாதத்தில் சிமெண்டு உற்பத்தி 4.2 சதவீதம் உயர்ந்துள்ளது.

இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவைப்பாட்டில் சுமார் 80 சதவீதத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. சென்ற 2012–13–ஆம் நிதி ஆண்டில் இந்த இறக்குமதி மிகவும் உயர்ந்ததையடுத்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடப்பு கணக்கு பற்றாக்குறை வரலாறு காணாத அளவிற்கு 4.8 சதவீதமாக உயர்ந்தது. எனவே, உள்நாட்டில் கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும். நவம்பர் மாதத்தில் கச்சா எண்ணெய் உற்பத்தி வளர்ச்சி 0.8 சதவீதத்திலிருந்து 1.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.

<u>கேர் ரேட்டிங்ஸ்</u>

நடப்பு நிதி ஆண்டில் முதல் எட்டு மாதங்களில் முக்கிய எட்டு துறைகளின் உற்பத்தி 2.5 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் இந்த வளர்ச்சி 6.7 சதவீதமாக இருந்தது. எனவே, தற்போதைய வளர்ச்சி ஏமாற்றமளிப்பதாக அமைந்துள்ளது என கேர் ரேட்டிங்ஸ் நிறுவனத்தின் தலைமை பொருளியல் வல்லுனர் மதன் சப்னவிஸ் தெரிவித்துள்ளார்.

<u>நிபுணர்கள் கருத்து</u>

இதன் காரணமாக தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி குறைந்து பொருளாதாரத்திலும் பாதிப்பு ஏற்படும் என்பது நிபுணர்களின் கருத்தாக உள்ளது சென்ற நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 5 சதவீதமாக குறைந்தது. நடப்பு நிதி ஆண்டின் முதல் மற்றும் இரண்டாவது காலாண்டுகளில் இந்த வளர்ச்சி முறையே 4.4 சதவீதம் மற்றும் 4.8 சதவீதமாக உள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ரசாயன உரப் பயன்பாடு தவிர்க்க முடியாதது: வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன்



உணவுப் பாதுகாப்பை நிறைவேற்ற நிலப் பயன்பாட்டை அரசு வரையறுக்க வேண்டுமென, வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் கூறினார்.

குன்னூர் வெலிங்டனிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தை, அதன் தலைவர் விஞ்ஞானி சிவசாமியுடன் செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட அவர், 'தி இந்து' செய்தியாளருக்கு அளித்த பேட்டி:

பி.டி. காய்கறிகளால் உடல் நல பாதிப்புகள் ஏற்படும் என்ற அச்சம் விவசாயிகளிடையே இருப்பதால் இதை எதிர்க்கின்றனர். எனவே பி.டி. விதைகளை அறிமுகப்படுத்தும் போது மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும். இதை கண் காணிக்க குழு அமைக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்கு உரிய விலை, மகசூல் கிடைத்தால், புதிய பயிர்களுக்கு ஆதரவு அளிப் பார்கள்.

**கோதுமை விவசாயம்**

இந்தியாவில் ஆண்டுதோறும் 260 மில்லியன் டன் தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதே அளவுக்கு காய்கறி, பழங்களும், பாலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. உணவுப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டதால்

ஆண்டுதோறும் மில்லி யன் டன் கோதுமை, 200 மில்லியன் டன் அரிசி தேவைப்படுகிறது.

தென்னிந்தியாவில் 10 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுவரும் கோதுமை, அடுத்த 20 ஆண்டுகளில் 50 ஆயிரம் ஏக்கராக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழகத்தில் 14 மாவட்டங்களிலும், கர்நாடகத்தில் 6 மாவட்டங்களிலும் கோதுமை விவசாயம் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

**ரசாயன உர பயன்பாடு**

மக்கள்தொகை பெருகி வருவதால், விவசாய நிலம் குறைந்து வருகிறது. எனவே இருக்கும் நிலத்தில் மகசூலை அதிகரிக்கும் பயிர்களை உருவாக்க வேண்டியதுடன், நிலப் பயன்பாட்டை அரசு வரையறுக்க வேண்டும். விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன், பயிர்களுக்கு உரிய விலை, நாடு முழுவதும் சந்தைப்படுத்தும் முறை ஆகியவற்றை அரசு அமல்படுத்த வேண்டும்.

பயிர்களுக்கு உரம் தான் முக்கி யம். அது இயற்கை உரமாகவோ, ரசாயன உரமாகவோ இருக்கலாம். இயற்கை வேளாண்மையில் மகசூல் குறைவு. அதேசமயம் பெருகும் மக்கள்தொகைக்கு உணவளிக்க ரசாயன உரப் பயன்பாட்டை தவிர்க்க முடியாது. இயற்கை வேளாண்மை மேற்கொள்ள தேவையான கால்நடைகள் இல்லை.

தண்ணீர், விவசாயத் தொழி லாளர்கள் பற்றாக்குறை அதிகரித் துள்ளதால், மழைநீர் சேகரிப்பை மேற்கொள்ள வேண்டும்; நீரை திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும். தொழிலாளர் பற்றாக்குறையை ஈடுகட்ட இயந்திரமயம்தான் தீர்வு. மலைப் பகுதிகளிலுள்ள நிலப்பரப்பை கருத்தில்கொண்டு, உரிய இயந்திரங்களை அறிமுகப் படுத்த வேண்டும் என்றார்.

## நம்மாழ்வார் மறைவு: தலைவர்கள் இரங்கல்

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் மறைவுக்கு முதல்வர் ஜெயலலிதா மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**முதல்வர் ஜெயலலிதா:** வேளாண்துறையில் பணிபுரிந்து வந்த நம்மாழ்வார், ரசாயன உரங்கள் பயன்படுத்த வேண்டும் என்ற மத்திய அரசின் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து அரசுப் பணியையே துறந்தவர். இயற்கையை காக்க இடிமுரசு போல் முழங்கிக் கொண்டிருந்த நம்மாழ்வார், இயற்கை எய்தியது ஈடுசெய்ய முடியாத இழப்பு ஆகும். இவருடைய இடத்தை இனி யாராலும் நிரப்ப முடியாது.

**பொன்.ராதாகிருஷ்ணன் (பா.ஜ.க.):** பூச்சிக் கொல்லிகள், மரபணு மாற்று விதைகள், மீத்தேன் எரிவாயு எடுத்தல், விளைநிலங்களை மாற்றி பயன் படுத்துதல் போன்றவற்றுக்கு எதிராக போராடிய, இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் மறைந்த தினத்தை, இயற்கை விவசா யத்தின் பாதுகாப்பு தினமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டும்.

**ராமதாஸ் (பாமக):** இயற்கைக்கும் விவசாயத்துக்கும் நம்மாழ்வார் செய்த பணிகள் ஒப்பற்றவை. அவரது மறைவால் விவசாயத்தின் எதிர்காலம் குறித்த கவலை ஏற்படுகிறது.

**வைகோ (மதிமுக):** நம்மாழ்வார் உடலால் மறைந்தாலும், விவசாயிகளையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க அவர் தந்த அறிவுரைகளாலும் தொலைநோக்கு திட்டங்களாலும் நம்மோடு வாழ்கிறார். அவர் ஏந்திய வேளாண்மை லட்சியக் கொடியை உயர்த்தி, அவரது கனவுகளை நனவாக்க உறுதி கொள்வோம்.

**ஜி.ராமகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்):** நம்மாழ்வாரின் நிலைபாட்டில் மாறுபட்ட கருத்துகள் இருக்கலாம். விவசாயிகளின் நலனில் அவருக்கு இருந்த அக்கறையும் இயற்கை விவசாயத்தில் இருந்த அர்ப்பணிப்பு உணர்வும் பாராட்டத்தக்கது.

**தா.பாண்டியன் (இந்திய கம்யூனிஸ்ட்):** நம்மாழ்வார் உலக நாடுகள் பலவற்றுக்கு சென்று, இயற்கை விவசாயம் குறித்த அனுபவங்களைத் திரட்டி, அதை தமிழகத்தில் செயல் முறைப்படுத்திக் காட்டினார். வாழ்நாள் முழுவதையும் விவசாயிகளின் நலனுக்காகவே அர்ப்பணித்தவர் நம்மாழ்வார்.

**எம்.ஹெச்.ஜவாஹிருல்லாஹ் (ம.ம.க.):** தமிழகத்தின் நெற்களஞ்சியத்தை மலடாக்கும் மீத்தேன் வாயு திட்டத்தை எதிர்த்து போராட்டக் களத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், நம்மாழ்வார் உயிர் பிரிந்துள்ளது. அவருடைய மறைவு இயற்கை வேளாண் உலகுக்கு மட்டுமல்ல, தமிழகத்துக்கும் பேரிழப்பாகும்.